இதழ் 238

# மண்

ஜேர்மனி / 2026

ஆடி - ஆவணி / Jul - Aug











செல்வி விமலகுமாரி நடராசா
தலைவர் - முன்னாள்
அரச உத்தியோகத்தர் ஸ்ரீ
சண்முகா பெண்கள் இல்லம் -
திருகோணமலை 50 ஆண்டுகள்
கடந்த கல்வி, பொதுப்பணியாளர்
வாழும் காலத்தில் வாழ்த்துவோம்!...










இலங்கையில் மிகப்பெரிய மனிதப் புதைகுழிகள் காணப்படும் யாழ் - செம்மணிப் பகுதியில் 24.06.2026 வரை (427) நாநூற்றி இருபத்தேழு மனித எலும்புக்கூடுகள் அகழ்வாராட்சியில் கண்டுபிடிக்கப்பட்டன. இவை அவலம் மிக்க காட்சிகளின் பதிவுகள் 24.06.2026 அகழ்வு நிகழ்வுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டன. எதிர்வரும் 17.07.2026 தொடக்கம் மீண்டும் அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** mann.sivarajah @gmail.com



**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

## அனைவருக்கும் வணககம்!...

தமிழர செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ள தென்ற தகவலை முதலில் தெரிவித்தவர் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ. மாணவி கிருஷாந்தி கொலை வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, செம்மணி மனிதப் புதைகுழி விடயம் தொடர்பில் முதலில் தகவல் தெரிவித்திருந்தார்.

செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ளதென அவர் கூறியதும் ஒவ்வொரு இரவுப் பொழுதிலும் செம்மணிப் பகுதியில் வாகனங்கள் ஓடித் திரிவதையும் அப்பகுதியில் படையினரின் நடமாட்டம் அதிகரித்திருந்ததையும் பொதுமக்கள் அறிந்திருந்தனர்.

எனினும் அன்றைய சூழலில் அதுபற்றி யாரிடமும் தெரிவிக்க முடியவில்லை. இந்நிலையில் செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ளது எனக் கூறிய சோமரத்ன ராஜபக்ஷவை நீதிமன்றின் உத்தரவில் செம்மணிக்கு அழைத்து வந்து, மனிதப் புதைகுழி உள்ள இடத்தை இனங்காட்டுமாறு கேட்கப்பட்டது.

இருந்தும் சோமரத்ன இனங்காட்டிய இடத்தில் மனிதப் புதைகுழிகள் இருக்கவில்லை. அதனோடு அந்த விவகாரம் அப்படியே அமிழ்ந்து போனது செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ளது எனக் கூறிய சோமரத்ன வேண்டுமென்றே அவ்வாறு கூறினார் என்பதாகக் கதை முடிக்கப்பட்டது.

ஆனால் நிலமகள் எந்தக் குற்றங்களையும் மறைப்புச் செய்பவள் அல்ல. ஆம், செம்மணி சித்துப்பாத்தி மயானப் பகுதியில் கட்டிட அமைவுக்காக அத்திவ

ாரம் வெட்டிய போது, அங்கு மனித என்புக் கூடுகள் வெளிவந்தன. அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.
அதிலிருந்து ஆரம்பித்த செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு 2026 யூன்வரை நானூறுக்கும் அதிகமான மனித என்புத் தொகுதிகளை மீட்கின்ற அளவில் விரிந்து செல்ல, அகழ்வுப் பணிகள் தொடர்கின்றன.

ஆக, சோமரத்ன ராஜபக்ஷ கூறிய செம்மணி மனிதப் புதைகுழி நிஜமானது என்பது இப்போது உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தவிர, மரண தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் சோமரத்ன ராஜபக்ஷ சிறையில் இருந்தபடி இந்த நாட்டின் ஜனாதிபதி அநுரகுமாரதிஸா நாயக்கவுக்கு எழுதிய கடிதங்கள் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் பல உண்மைகளை வெளிப்படுத்தக்கூடியவை.

ஆம், ஜனாதிபதிக்கு அவர் எழுதிய கடிதத்தில் மாணவி கிருஷா ந்தி கொலையுடன் தொடர்புபட்ட அதிகாரிகள், அந்தக் காலப்பகுதியில் செம்மணிக்குக் கொண்டு வரப்படும் சடலங்கள், அவை புதைக்கப்படுகின்ற விடயங்கள் எனப் பலவற்றை அவர் கூறியுள்ளார்.

ஆக, செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் உண்மைகள் வெளிவர வேண்டுமாயின், அதற்கு லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ வின் வாக்குமூலம் சாட்சியம் மிகவும் அவசியமும் முக்கியத்துவமும் வாய்ந்த தாகும். இதைவிட நாடுமுழுவதும் எத்தனை புதைகுழிகள் எங்கு

நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த நாட்டின் இன்றைய நிலமைகளைப் பார்க்க, கேட்க, அறிய நம் அனைவருக்கும் மனவேதனைதான் மிஞ்சுகின்றது. அந்த அளவிற்கு நாடு பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. நாடு சுதந்திரமடைந்து 78 வருடங்கள் உருண்டோடினாலும் இன்றும் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகள் குறைந்த பாடில்லை. இந்தளவுக்கு நாடு கட்டுண்டு கிடக்கின்றது.

மாறி..மாறி வரும் பேரினவாத அரசுகளும், இன, மத, மொழி போன்ற வேறுபாடுகளை முதன்மைப்படுத்தி ஆட்சி புரிந்தமையினால் இன்று நாடு சிதைவுண்டு கிடக்கின்றது. பௌத்த பேரினவாதமும், அடக்கி ஆளும் போக்கும், சமஉரிமை இல்லாத போக்கும் இருக்கும் வரை நிலமை தொடரத்தான் செய்யும்.

இவற்றைவிட கால மாற்றம் நவநாகரீக மாற்றம் உலகப் போக்கில், கணனி யுகத்தில் எத்தனையோ மாற்றங்கள் உலகெங்கும் வந்துவிட்டதால் நமது தாய் நாட்டிலும் பல முன்னேற்றங்கள், மாற்றங்கள் ஏற்பட்டிருப்பது உண்மைதான். இது நல்ல விடயமாகும்.ஆனால் இந்த மாற்றங்களால் பெரும் சமூக பிறழ்வுகளும் வந்து இன்று பெரும் அச்சுறுத்தல்களை நாடு எதிர்கொண்டுவருவதை அவதானிக்கிறோம்.

நாடு எங்கும் களவு, கொள்ளை, கற்பழிப்பு, பெண்கள் சிறுவர்கள் மீதான வன்முறைகள், ஆட்கடத்தல், போதை, கொலை, சொத்துக்கள் சூறை, நில அபகரிப்பு, சமயச்சண்டை,போக்குவரத்துப் பிரச்சனை, சுகாதாரச் சீர்கேடு மட்டுமல்ல சிறைச்சாலைகளில்கூட மோதல்களுமாக தொடரும் பேரவலங்கள் குறைந்தபாடில்லை.. இவற்றைவிட கல்வி, சமூகநலன்கள், விலை ஏற்றம், எண்ணெய்நெருக்கடி, இயற்கை அழிவு போன்ற பல பிரச்சனைகளால் நாடு தத்தளித்துக்கொண்டே இருக்கின்றது.

புதிய, இடது அரசு என்று சொல்லப்படும் அனுரா அரசும் ஆட்சிக்கு வந்து ஒருவருடத்திற்கு மேலாகிவிட்டது. ஊழல், அதிகார துஸ்பிரயோம், மோசடிகள், இனமுரண்பாடுகளைத் தூண்டிய மதவெறியர்கள், அரசியல் வாதிகளின் கடந்தகாலச் சம்பவங்கள் குவிந்து கிடப்பதால் இவற்றிற்குத் தீர்வு, நீதி நிலைநாட்ட இந்த அரசு படாதபாடு பட்டாலும் எதிரணிகளும் இனத்துவேசிகளும் இந்த அரசை கலைத்துவிடுவதற்கு படாதபாடு படுகிறார்கள். இதில் நமது தமிழ்த்தரப்பினரும் சிலர் ஒத்துப்போகிறார்கள் என்பது உண்மையே..

இன்றைய யதார்த்த நிலையில் இந்த அரசாங்கம் இருக்கும் போதே தமிழர் பிரச்சனைகளும் தீர்வுகாணப்படவேண்டும் இதுவும் தவறினால் எதிர்காலத்தில் நல்ல முடிவுகளை எட்டுவது மிகக் கடினமாகவே அமையும். ஆகவே தமிழ்-சிங்கள-இஸ்லாமிய-மலையக அரசியல் வாதிகளும் பொதுமக்களும். இந்த அரசு எடுக்கும் நல்ல விடயங்களை வரவேற்று ஒத்துழைப்பு வழங்கவேண்டும். எந்தநாளும் வெறும் எதிர்ப்பு அரசியல் எதிர்ப்புச் செயற்பாடுகள் ஒரு வீதம்கூட பயனளிக்காது என்பது உண்மையாகும். அனைத்து இன, மத, மொழி மக்களும் நம்நாடு என்று செயற்பட்டால்தான் நாடு உருப்படும்.. சுமூகமான தீர்வு கிட்டும்..நல்வாழ்வும் அமைதிவாழ்வும் கிட்டும்.. இதுதான் யதார்த்தமாகும்!... **- ஆசிரியர் - 10.07.2026**

**சிறுவர் வட்டம்...**




**ஆத்திசூடி...**

## தேசத்தோடு ஒத்துவாழ்...

நீ வசிக்கும் தெருவில் ஒரு பிள்ளையார் கொயில் இருக்கிறது. தெருவின் இரு சாரியிலும் உள்ள வீட்டுக்காரர்களும் ஒற்றுமையாகப் பிள்ளையாருக்கு விழா எடுப்பார்கள். ஆண்டுதோறும் விநாய சதுர்த்தி அன்று, ஏனோ உனக்கு இதில் நாட்டமில்லை. அதனால் தெருவாசிகளோடு நீ ஒத்துழைக்காமல் இருக்கலாமா..கூடாது. உனக்கு விரும்பமில்லாது போனாலும் அவர்கள் நடத்தும் சதுர்த்தி விழாவில் நீ கலந்துகொள்வதுதான் முறை. நீ பங்குகொள்ளாவிடில் அவர்கள் உன்னை வெறுப்பார்கள். பகைமை பாராட்டுவார்கள். ஆகவே தெரு வாசிகளோடு, ஊரோடு ஒத்துப் போவதுதான் அறிவுடையவர் செயல். தெருவாசிகள் போலத்தான் ஊரும் நாடும்.. நாட்டு மக்களோடு கலந்து, ஒத்துப்போய், அவர்கள் வழி நடப்பதுதான் முறை என்று அறிவுரை வழங்குகின்றார் ஔவைப்பாட்டி.

## தையல் சொல் கேளேல்...

தையல் என்றால் ஆடைகளைத் தைப்பது அல்ல. தூய தமிழில் பெண்ணுக்குத் தையல் என்று ஒரு சொல் உண்டு. பெண்களுக்குப் பூ மனம். கணவனை, பெரியவர்களை உபசரித்துக் குழந்தைகளைக் காக்க, ஏழைகளுக்கு உதவ, இளகிய மனம் தேவை. இவை எல்லாம் வீட்டில் இருந்து செய்பவை. அந்தக் காலத்துப் பெண்களைப் பற்றிக் கூறுகின்றார் ஔவையார். வெளி உலகம் பற்றி அதிகம் அறியாது வாழ்ந்த அக்காலத்துப் பெண்களுடைய யோசனைகளைக் கேட்காதே, அது தவறான முடிவைத் தரலாம் என்று. ஆனால் எதிலும் முதலாவதாக நிற்கும் இன்றைய பெண்களுக்கு இது பொருந்தாது. தையல் - பெண் இன்று நாட்டையே, உலகையே வழிநடத்திச் செல்வதில் திறனுள்ளவர்களாக, வல்லவர்களாக முன்னேறிவிட்டாள் என்கிறார் ஔவைப் பாட்டி.

# நல்நெறிபற்றி........

- வி நந்தகுமாரன் -

### வலுவுடன் வாழ் வளத்துடன் வாழ்வாய்.

வலுவூட்டும் வழிமுறைகள் வாழ்க்கைக்கு விமோசனத்தை வகுக்கிறது.
வனப்பும், சிறப்பும் நாம் வாழும் வகையில் இருந்தே வளர்த் தெடுக்கப்படுகிறது.
வரலாறும் வழி வழி முறைகளும் வாழ்க்கையில் விழிப்பு நிலையைத்தரும்
வழி தவறும் வாய்ச் சொற்கள் வேதனையை விதைத்துச் செல்கிறது.
வாயில் வரும் வார்த்தைகளை வரம்புகட்டி வெளியில்விடு, வம்புகள் வராது.
வளர்த்துக் கொள்ளும் வேண்டாத ஆசைகள் வீணான விவகாரத்திற்குள் வீழ்த்துகிறது.

வழிதவறி வரும் வாய்மொழிகள் வன்செயல்களை விதைத்துச் செல்கிறது.
வடுக்களை வளர்க்காமல், வலிமை வாய்ந்த விவேகம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.
வளமும் வரட்சியும் நீங்கள் தெரிந்தெடுக்கும் வாசல்வழிப் பாதையைப் பொறுத்தது.
வழிதவறி வழுக்கி விழும் வாசல்வழி செல்லாமல், எப்பொழுதும்விழிப்பாயிரு.
வஞ்சனை கலந்த வரட்சியான வாழ்வை விலக்கி, வசந்தம்வளர வழிகோல வேண்டும்.
வடிகட்டி வார்த்தைகளை வெளியில் விடும்போது, வேதனை வராது தடுக்கலாம்
வன்செயல்களைக் கொண்டுவரும் வார்த்தைகளை வரம்புகட்டி விலக்குதல் அவசியம்.
வார்த்தைப் பிரயோகம் சுடாமல் சுமூகமாக இருப்பதே, சுகமான வாழ்வு.

வாழ்க்கை ஒரு விதிமுறை வழி முறைகளில் வகுக்கப்பட்டுள்ளது.
வாழ்க்கை உயிரோட்டமுள்ள ஒன்று மிக உயர்வானதும் கூட.
வாழ்க்கையில் வரும் வருத்தங்களும் வேதனைகளும் விழிப்புணர்வைத் தோற்றுவிக்கின்றது.
வாழ்ந்து காட்டமுடியும் என்ற மனத்தைரியத்துடன் வாழ்ந்தால் வலுவுடன் வாழலாம்
வாழ்க்கையைப் போராட்டமாகப் பார்க்கக்கூடாது. அது புத்திஜீவிகளின் பூந்தோட்டம்
வாழ்வதற்கு வழிதேடுவதில் விழிப்புணர்வுடன் விவேகமும் கூடவே வகுக்க வேண்டும்.

வாழ்ந்த வாழ்க்கை வாழப்போகின்ற வாழ்க்கைக்கு வலுச்சேர்த்துச் செல்கிறது.
வாய்ப்பை ஏற்படுத்தும் போதுதான் வளமான வாழ்வு நம்மை வந்து வரவேற்கும்
வாழ்க்கையில் விசுவாசிகளும் வருவார்கள் விரோதிகளும் வருவார்கள் விழிப்பாயிரு.
வாழ்வதற்கு வழிவகுத்துக் கொடுக்கலாம். ஆனால் நீதான் வாழ்ந்தாக வேண்டும்.
வாழ்க்கை வண்ணமலர்களாக வேண்டுமே தவிர வருந்தி வாழும் வாடிய மலராகாதே...

## ஓரெழுத்துச் சொற்கள்..

01- மா - முக்கனிகளில் ஒன்று
02- தீ - பற்றி எரிவது
03- தை - பொங்கல் பண்டிகை மாதம்
04- கோ - அரசனைக் குறிக்கும்
05- கா - சோலையைக் குறிக்கும்
06- பூ - மலருக்கு மறுபெயர்
07- கை - உறுப்புகளில் ஒன்று
08- ஆ - பசுவுக்கு மற்றொரு பெயர்
09- மை - கண்ணுக்கு அழகு
10- பா - பண், பாடல்
11- சா - இறத்தலைக் குறிக்கும்
12- ஊ - இறைச்சி, மாமிசம்
13- நா - உணவைச் சுவைப்பது
14- மே - மேன்மையைக் குறிக்கும்
15-- சோ - மதில், அரண்

## தமிழ் துணை எழுத்துகள்..

- துணைக்கால் - கா, சா
- கொம்புக்கால் - ளு, கௌ, சௌ
- மடக்கு ஏறுகீற்றுக்கால் - ணு, தூ
- ஒற்றைக் கொம்பு - கெ, நெ
- இரட்டைக் கொம்பு - கே, நே
- சங்கிலிக் கொம்பு - கை, சை
- சாய்புக் கீற்று - ஏ
- இறங்குக் கீற்று - பு, சு
- மடக்கு ஏறு கீற்று - ணு, து
- பின் வளைக்கீற்று - கூ
- மேல் விலங்கு - கி, தி
- கீழ் விலங்கு - மு, ரு
- இறங்குக்கீற்று கீழ்விலங்குச்சுழி -சூ
- மேல் விலங்குச் சுழி - கீ, தீ
- கீழ் விலங்குச் சுழி - மு, ரூ
- இறங்குக்கீற்று கீழ்விலங்குச்சுழி -சூ

## மூன்றுவகை

- முக்கனி
  மா, பலா, வாழை
- முத்தமிழ்
  இயல், இசை, நாடகம்
- மும்மூர்த்திகள்
  பிரம்மா, விஷ்ணு, சிவன்
- முப்படை
  நிலப்படை,கடற்படை, வான்படை
- மூவுலகம்
  விண்ணுலகம், மண்ணுலகம், பாதாளம்
- மூன்று காலங்கள்
  இறந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம்




# முல்லாவின் கதை

## முல்லாவின் தந்திரம்...

ஒரு நாள் முல்லா குளத்தில் நீந்திக்கொண்டிருந்த வாத்துக்களில் ஒன்றைப் பிடிக்க முயற்சி செய்தார். வாத்துக்கள் கரை ஓரமாக வரும்போது முல்லா அதனை எட்டிப் பிடிக்க முயற்சி செய்தார். வாத்துக்களோ அவர் கையில் அகப்படுவதுபோல பாவனை செய்து உலாவிக் கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் முல்லாவின் நண்பர் ஒருவர் அந்தப் பக்கமாக வந்தார்.

வாத்தைப் பிடிக்க முல்லா எடுக்கும் பிரயாசையையும் அதில் அவர் அடிக்கடி தோல்வியடைவதையும் கண்ட நண்பருக்குச் சிரிப்பு வந்தது. ”என்ன முல்லா அவர்களே வாத்து வேட்டை நடக்கிறது பொலிருக்கிறது” என்று சிரித்துக் கொண்டே கேட்டார். முல்லா உடனே தமது பையிலிருந்த ரொட்டித் துண்டை எடுத
துக் குளத்து நீரில் நனைத்துச் சாப்பிடத் தொடங்கினார். ”என்ன செய்கிறீர்கள் முல்லா அவர்களே” என நண்பர் கேட்டர். ”வாத்து நீரில் ரொட்டியை நனைத்துச் சாப்பிடுகிறேன்” என்று தனது ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு கூறிச் சமாளித்தார் முல்லா.

........................................................................................................................................

## புத்த பெருமான்..

புத்த சமயத்தைத் தோற்றுவித்தவர்.
அரச குடும்பத்தில் பிறந்தவர்
இயற்பெயர் - சித்தார்த்தர்
தந்தை - சுத்தோதனர், தாய் - மாயாதேவி
மனைவி - யசோதை, மகன் - இராகுலன்
துறவுகொண்டது - 29 வயதில்
மரணமடைந்த நகர் - குசி (இந்தியா)

## வாழ்க்கைத் தத்துவங்கள்...

-அழிவைத்தருவது - ஆணவம்

-ஆபத்தைத் தருவது - கோபம்

-இருக்க வேண்டியது - பணிவு

-இருக்கக்கூடாதது - பொறாமை

-உயர்வுக்கு வழி - உழைப்பு

-கண்கண்ட தெய்வம் - பெற்றோர்

-செய்யவேண்டியது - உதவி

-செய்யக்கூடாதது - துரோகம்

-நம்பக்கூடாதது - வதந்தி

-நழுவ வடக்கூடாதது - வாய்ப்பு

-நம்முடன் வருவது - புண்ணியம்

-பிரியக்கூடாதது - நட்பு

-மறக்கக்கூடாதது - நன்றி

-மிக மிக நல்லநாள் - இன்று

-மிகப்பெரிய தேவை - அன்பு

-மிகவும்சுலபமானது - குற்றம்காணல்

-மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு

-விலக்கவேண்டியது - வாதம்

-வந்தால் போகாதது - பழி

-போனால்வராதது - மானம்

## காற்றுகளில் எத்தனை..

-தென்றல் - Breeze

-பலத்தகாற்று - Gust

-புயற்காற்று - Gale

-புயல் - Storm

-சூறாவளி - Hurricane

-சூறாவளி - Typhoon

-சுழற்காற்று - Cyclone

-சுழற்காற்று - Tornado

-சுழற்காற்று - Whirlwind

-கடும்புயல் - Tempest

-காற்றடிப்பு - Blast

-காற்றோட்டம் - Current

## போத்துக்கீசச் சொற்கள் சில

மேசை - Mesa

யன்னல்- Janela

சாவி - Chave

சப்பாத்து, காலணி- Sapato

அல்மாரி - Armario

பிஸ்கட் - Biscoito

சட்டை, கமீஸ் - Camisa

காற்றோட்டம் - Current

# நூல்கள் - ஆசிரியர்கள்

1. சிலப்பதிகாரம் – இளங்கோ அடிகள்
2. இராமாயணம் (மூலம்) – வால்மீகி
3. இராமாயணம் (தமிழில்) – கம்பர்
4. சீறாப்புராணம் – உமறுப்புலவர்
5. பெரியபுராணம் – சேக்கிழார்
6. மகாபாரதம் – வியாசர்
7. மகாபாரதம் (தமிழில்) – வில்லிபுத்துரார்
8. திருவாசகம் – மாணிக்கவாசகர்
9. தேம்பாவணி, ஒப்பியலிலக்கணம் – வீரமாமுனிவர்
10. மகாவம்சம் – மகாநாம
11. பாஞ்சாலி சபதம் – சுப்பிரமணிய பாரதியார்
12. காஞ்சிப்புராணம் – சிவஞான முனிவர்
13. நற்சிந்தனை –யோகர் சுவாமிகள்
14. நன்னூல் – பவணந்த முனிவர்
15. வெற்றிவேட்கை – அதிவீரராம பாண்டியன்
16. நல்வழி, நீதிநூல்கள், ஆத்திசூடி. கொன்றைவேந்தன் – ஒளவையார்
17. மனோன்மணியம் – சுந்தரம்பிள்ளை
18. திருப்புகழ் – அருணகிரிநாதர்

tnpsc_mbi.net

## ஆபிரகம் லிங்கனின் பதில்...

ஒருமுறை ஆபிரகாம் லிங்கனிடம் அறிஞர்கள் சிலர் படிப்பது எதற்காக?...படித்தால் பணம் கொட்டப் போவதில்லை, பின்னர் ஏன்?..எப்போதும் படித்துக்கொண்டே இருக்கிறீர்கள் என்று கேள்வியைக் கேட்டனர். அதற்கு ஆபிரகாம் லிங்கனின் பதில்.. நான் பணம் சேர்ப்பதற்காகப் படிக்கவில்லை. பணம் வரும்போது எப்படிப் பண்போடு வாழவேண்டும், எப்படிச் செலவு செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவே படித்துக் கொண்டிருக்கிறேன் என்று பதில் கூறினார். ஒரு மிகச் சிறந்த மேதையின் ஆளுமையான பதில் அனுபவத்தை மட்டுமல்லாமல் எல்லோர் மனதிலும் நிலைத்து நிற்கும்!..

## பொது அறிவு.....

01- உலகில் மிக வேகமாகக் கடலில் மூழ்கிவரும் நகரம் - இந்தோனிஷியா-ஜகர்த்தா
02- உலகில் மிக வேகமாக மக்கள் தொகை கறைந்துவரும் நாடுகள் - யப்பான்,பல்கேரியா
03- வேகமாகத் தன்னைத்தானே சுழலும் கோள் - வியாழன்
04- உலகின் அதிவேக தலை விலங்கு - சிறுத்தைப்புலி
05- உலகில் அதிவேக தரைப் பறவை - தீக்கொழி
06- உலகின் அதிவேக பறவை - வல்லூறு
07- உலகில் மிக வேகமாக வளரும் தாவரம் - மூங்கில்
08- உலகில் அதிவேக இணையத் தேடுபொறி - கூகிள்
09- உலகில் மிக உயர்ந்த இணைய வேகச் சாதனையைப் பதிவு செய்தநாடு - யப்பான்
10- உலகில் மிக வேகமாக வளர்ந்துவரும் சமயம் - இஸ்லாம்
11- உலகில் மிக வேகமாக வளர்ந்துவரும் நகரம் - துபாய்
12- உலகில் மிக வேகமாக வளர்ந்துவரும் ஆற்றல் மூலம் - சூரிய ஆற்றல்

## முதல் நாடுகள்!..

-ஜனநாயகத்தை அறிமுகப்படுத்திய முதல் நாடு - கிறீஸ்லாந்து
-தாள் காசு இதை அறிமுகப்படுத்திய முதல் நாடு - சீனா
-அச்சு இயந்திரத்தை அறிமுகப்படுத்திய முதல் நாடு - ஜேர்மனி
-உள்ளூர் பத்திரிகையை அறிமுகப்படுத்திய முதல் நாடு - ஜேர்மனி
-பாராளுமன்ற முறையை அறிமுகப்படுத்திய முதல் நாடு - ஐஸ்லாந்து
-வங்கி முறையை அறிமுகப்படுத்திய முதல் நாடு - இத்தாலி
-தொடரூந்து (ரயில்) சேவையை அறிமுகப்படுத்திய முதல் நாடு- இங்கிலாந்து
-கார்(மகிழுந்து)உதிரிப்பாகங்களை அறிமுகப்படுத்திய முதல்நாடு -ஜேர்மனி
-விமானத்தை அறிமுகப்படுத்திய முதல் நாடு - அமெரிக்கா
-சினிமாவை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு - பிரான்ஸ்
-கணனி இணையங்களை அறிமுகப்படுத்திய முதல் நாடு - அமெரிக்கா
-தொலைபேசியை அறிமுகப்படுத்திய முதல் நாடு - அமெரிக்கா
-கணனியை உலகிற்கு அறிமுகப்படுத்திய முதல் நாடு - இங்கிலாந்து

## இரு பொருள் தரும் ஒரு சொல்....

01- அம்பி - படகு, தோணி
02- ஆழி - மோதிரம், கடல்
03- உழுவை - புலி, மீன்வகை
04- ஈனும் - தரும், உண்டாக்கும்
05- தெறு - பகை, தண்டித்தல்
06- நுதல் - நெற்றி, புருவம்
07- நமன் - எமன், நம்மவன்
08- நடலை - துன்பம், அசைவு
09- கான் - காடு, மணம்
10- கிரி - மலை, பன்றி
11- கவிகை - குடை, ஈகை
12- புள் - பறவை, வண்டு
13- துடி - பறை, உதடு
14- மாதிரம் - மலை, ஆகாயம்
15- மரை - மான், தவளை
16- கேழல் - பன்றி, நிறம்
17- கேசரி - சிங்கம், இனிப்பு
18- மேதி - எருமை, நெற்களம்
19- ஞாலம் - உலகம், விந்தை
20- விரை - மணம், தேன்

## நிறுத்தற்குறிகள்...

Ampersand (&) இணைப்புக்குறி
Asterisk (*) நட்சத்திரக்குறி
Ellipsis (...) தொடக்கக்குறி முப்புள்ளி
Brackets ( ) அடைப்புக்குறி
Slash (/) குறுக்குவெட்டுக்குறி

## அயற்சொல் - தமிழ்ச்சொல்

01- வக்கீல் - வழக்கறிஞர்
02- ஜாமீன் - பிணை
03- சன்னல் - சாளரம்
04- கச்சேரி - அலுவலகம், இசைவிருந்து
05- சிப்பந்தி - பணியாளர்
06- மேசை - நிகண்டு, எழுத்துமேசை
07- சாவி - திறவுகோல்
08- அலமாரி - நெடும்பேழை
09- பாதிரியார் - சமயக்குரு
10- ரொட்டி - வெதும்பி
11- துப்பாக்கி - சுடுகலன்
12- ஜனங்கள் - மக்கள்
13- ஜாக்கிரதை - விழிப்பு
14- அங்கத்தினர் - உறுப்பினர்
15- அதிபர் - தலைவர்
16- அர்த்தம் - பொருள்
17- அவசரம் - விரைவு
18- அபிஷேகம் - திருமுழுக்கு நீராட்டு
19- அக்கிரமம் - முறைகேடு
20- அசல் - மூலம்
21- அபூர்வம் - அரிது, புதுமை
22- அநுக்கிரகம் - அருள்
23- அர்ச்சினை - மலர்வழிபாடு
24- அபிப்பிராயம் - கருத்து
25- அந்தஸ்து - தகுதி
26- ஆலயம் - கோயில்
27- ஆனந்தம் - மகிழ்ச்சி
28- ஆபத்து - இடர்
29- ஆராதனை - வழிபாடு
30- ஆசீர்வாதம் - வாழ்த்துகள்

## சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 56

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | 2 | | | | 6 |
| 5 | | | | | | 2 | 9 | |
| | 7 | | 3 | | | 5 | | |
| | | | | | | 4 | | |
| | 3 | | 7 | | 5 | | | 1 |
| | | | 8 | 1 | 3 | | | 9 |
| 1 | | | | 9 | | | 6 | 8 |
| | | | 6 | 5 | | | 7 | 2 |
| 7 | | 2 | | | | | 4 | |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 149
## ( ஆடி-ஆவணி 2026 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-04- ஐரோப்பிய நாடுகளில் சென்றமாதம் பெரும் காலநிலைமாற்றம் அது என்ன?..
13-14- இந்துக்கள் இந்த மிருகத்தைத் தெய்வமாக வழிபடுவார்கள்.
வ-இ
08-06- இலங்கையில் ஒரு பிரதான நகரம்.
12-09- ஔவையார் அருளிய நூல்களில் ஒன்று.
கீ-மே
12-04- உடல் உறுப்புகளில் ஒன்று.
15-11- உதைபந்தாட்டத்தில் அதிகம் பாவிக்கும் உறுப்பு.
மே-கீ
01-09- தோல்வி என்றால் மறுபக்கம்...
12-16- தந்திரமுள்ள மிருகம்

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்....



# 9ம் வகுப்பு மாணவன் 10ம் வகுப்பு பரீட்சையில் 9 பாடங்களிலும் "ஏ" எடுத்துச் சாதனை...

சாதாரணதர பரீட்சை : 09 ஆம் தரத்தில் 9ஏ பெறுபேறுகளை பெற்று சாதித்த மாணவன் : குவியும் வாழ்த்துக்கள்காலி, மகிந்த கல்லூரியின் மாணவரான பிஹது பினல், சாதாரண தர பரீட்சையில் 9 ஏ பெறுபேற்றைப்பெற்று நாடு முழுவதும் கவனத்தையும் ஈர்த்துள்ளதுடன் அவனின் இந்த சாதனைக்கு பலரும் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இந்த சாதனையை படைக்க காரணம் 9 ஆம் தரத்திலேயே, அந்த மாணவன் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றியதுதான் இந்த அசாதாரண வெற்றி குறித்து அவர் மிகவும் மகிழ்ச்சியடைகிறார். இதற்கு முன் யாரும் செய்யாத ஒன்றை புதிதாகச் செய்ய வேண்டும் என்ற தனது தீவிர விருப்பத்தின் காரணமாக பிஹது இந்த முடிவை எடுத்தார்

தனது இந்த சாதனைக்கு முக்கிய காரணமாக விளங்கிய தனது பெற்றோருக்கு முதற்கண் அவர் தனது நன்றியைத் தெரிவிக்கிறார். மாணவன் முன்கூட்டியே சாதாரண தர பரீட்சையை எதிர்கொள்ளப் போகிறான் என்பதை அறிந்த பிறகு, காலி மகிந்த கல்லூரியின்

ஆசிரியர்களும், அவனுக்காக ஒரு பெரும் அர்ப்பணிப்பைச் செய்துள்ளனர்.

## பாடசாலை ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை

பள்ளி ஆசிரியர்கள் அவனுக்குத் தேவையான முந்தைய தேர்வுத் தாள்களைக் கொடுத்து உதவியுள்ளனர், மேலும் மற்ற ஆசிரியர்கள் பாடத்திட்டத்தின் முக்கிய பகுதிகளையும் கோட்பாட்டுக் கருத்துக்களையும் மிகத் தெளிவாக விளக்கி அவனை ஊக்குவித்துள்ளனர்.இந்த வெற்றியை நோக்கி தன்னை வழிநடத்திய அனைத்து ஆசிரியர்களுக்கும் பிஹது தனது மரியாதைக்குரிய நன்றியைத் தெரிவிக்கிறான்.


கல்வி
விலங்குகள் மற்றும்
பறவைகளின் தொனி மரபுச் சொற்கள்
அணில் — கீச்சிடும்
ஆடு — கத்தும்
கரடி — கத்தும்
கழுதை — கத்தும்
குதிரை — கனைக்கும்
நரி — ஊளையிடும்
நாய் — குரைக்கும்
பசு — கதறும்
எருது — முக்காரமிடும்
புலி — உறுமும்
பூனை — சீறும், கத்தும்
சிங்கம் — கர்ச்சிக்கும்
யானை — பிளிறும்
பன்றி — உறுமும்
எலி — கீச்சிடும்
பாம்பு — சீறும்
ஆந்தை — அலறும்
மயில் — அகவும்
தவளை — கத்தும்
காகம் — கரையும்
கிளி — பேசும்
குயில் — கூவும்
குருவி — கீச்சிடும்
கோழி —
சேவல் — கூவும்
தேனி — ரீங்காரம்
வண்டு — இரையும்
பல்லி — சொல்லும்


Junior Academy
கூட்டத்தை குறிக்கும் மரபுப்பெயர்கள்
மான் - கூட்டம்
எறும்பு - கூட்டம்
உடு - திரள்
ஆ - நிரை
மா - சோலை
திறப்பு - கோர்வை
பூ - கொத்து
தென்னை - தோப்பு
கல் - குவியல்
சேனை - திரள்
பாடகர் - குழு
தீவு - கூட்டம்

## 2025 ஆம் ஆண்டிற்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

20.06.2026

பாட ரீதியான பெறுபேறுகள்:

| | |
|---|---|
| பௌத்த சமயம்: | 89.81% |
| சைவ சமயம்: | 84.34% |
| கத்தோலிக்க சமயம்: | 89.10% |
| கிறிஸ்தவ சமயம்: | 86.35% |
| இஸ்லாம் சமயம்: | 89.56% |
| சிங்கள மொழி மற்றும் இலக்கியம்: | 87.03% |
| தமிழ் மொழி மற்றும் இலக்கியம்: | 87.60% |
| ஆங்கில மொழி: | 73.57% |
| கணிதம்: | 70.11% |
| வரலாறு: | 81.93% |
| விஞ்ஞானம்: | 72.03% |



## சென்ற இதழ் தொடர்ச்சி......

# அறிவாலயம் [தகவல்]

1) உங்கள் கணினியில் ஏற்பட்டுள்ள, ஏற்படுகின்ற பிழைகளைக் கண்டறிந்து அதனைத் திருத்தியும், அல்லது திருத்துவதற்கான தகவலையும் தருகின்றோம்.

2) உங்கள் கணினியை வருடத்தில் ஒரு முறையாவது பரிசோதனை செய்து அதனை ஒருங்காக வேலை செய்ய உதவி செய்கின்றோம்.

3) உங்கள் Laptop, PC, Handy WLAN/router, printer, email Hardware & Software போன்றவற்றில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள எங்களை நாடுங்கள்.

4) உங்கள் கணினியில் Windows 11 ஐ பதிவு செய்ய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள ஐரோப்பியக் கணினிக் கல்வி நிலைய அறிவாலயத்தை நாடுங்கள்.

5) உங்கள் கணினியில் ஒரு குறிப்பிட்ட பிழைதொடர்ந்தும் வந்து கொண்டிருக்கின்றது. அது என்ன பிழை என்பதனை உங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை என்றால் எமது கணினி அறிவுசார் நிபுணர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

6. உங்கள் கணினி வரவர வேகம் குறைந்து செல்கின்றதா?

7) Windows ஐ பதிவு செய்வதற்கான இலக்கங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமா?

8) உங்கள் கணினியில் SSD, M.2, போன்ற அதிவேக இணைப்புக்களை இணைக்க வேண்டுமா?

9) உங்கள் கணினியில் மேலதிகமான வேகம் கூடிய Ram 16 GB ,32 GB ,64 GB பொருத்த வேண்டுமா?

10) உங்களிடம் இருக்கும் கணினித் தகவலைப் பாதுகாப்பாக இன்னோர் கணினிக்கு மாற்ற வேண்டுமா?

11) உங்கள் கணினியில் தகவல்களை பாதுகாக்க என்ன செய்ய வேண்டும் என்பதனை அறிந்து கொள்ள வேண்டுமா?

# இணைய வடிவமைப்பு








# அறிவாலயம் [தகவல்]

உங்கள் இணையத்தளங்களை சிறந்த முறையில் வடிவமைக்க தகவலைப் பெற்றுக் கொள்ள வேண்டுமா?

1. நீங்கள் எடுத்துச் செல்கின்ற அல்லது வீட்டில் பாவனை செய்கின்ற மின் உபகரணங்கள் பழுதடைந்து விட்டதா? அல்லது அவற்றினைப் பற்றியதான தகவல் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள வேண்டுமா?
2. Handy பழுதுபார்த்தல், தரவு மீட்பு, போன்ற தகவலை அறிந்து கொள்ள வேண்டுமா?
3. ps4 and PS5 போன்ற விளையாட்டு சாதனங்களைக் கொள்வனவு செய்ய அல்லது பாவனைச் சக்தி அதிகரிக்கச் செய்ய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள?
4. கணினி அல்லது விளையாட்டுக் கணினி ஒன்றினை நீங்களாகவே உருவாக்க வேண்டுமா? அதன் கல்வியையும், தகவலையும் அறிந்து கொள்ள வேண்டுமா?
5. மென்பொருள், வன்பொருள் பற்றியதான சிறந்த கல்வி முறையைக் கற்றுக் கொள்ள வேண்டுமா?
6. புதிதாக ஒரு விரைவான இணையத்தள இணைப்பை ஏற்படுத்த ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமா?
7. கமறா, வீடியோ போன்றவற்றிற்கான தொழில்நுட்பக் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டுமா? அல்லது உங்கள் தொழில்நுட்பங்களை (வேகமாக்க) சிறந்ததாக்க வேண்டுமா? எங்கள் அறிவாலய இளைஞர்கள் தகவல்களை உங்களுக்குத் தருகின்றார்கள். அல்லது உங்களுக்குத் தெரிந்த தகவல்களை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்க உதவி செய்கின்றீர்களா?

# கொண்டாட்ட நிகழ்வுகளுக்கான [தகவல்]



## குறளும் பொருளும்...



**கூடாத நட்பு..**

821- சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு-

822- இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
முனம்போல வேறு படும்.

823- பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணார்க் கரிது.

824- முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும்.

825- மனத்தி னமையா தவரை யெனத்தொன்றுஞ்
சோல்லினாற் றேறற்பாற் றன்று.

826- நட்டாற்போ னல்லவை சொல்லினு மொடார்சொ
லோல்லை யுணரப் படும்.

827- சொல்வணக்க மொன்னார்க்கட் கொள்ளற்க
வில்வணக்கந்தீங்கு குறித்தமை யான்.

828- தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
இழுதகண் ணீரு மனைத்து.

829- மிகச்செய்து தம்மெள்ளு வாரை நக்ச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று.

830- பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட் பொரீஇ விடல்.

# குறளும் பொருளும்...

**அகப்பகையும் புறவுறவும் கூடா நட்பு:-**

821- கூடாமலிருந்தே தமக்கு வாய்ப்புக் கிட்ட காலைக் கூடுபவரின் நட்பு நீர் அதிகம் வாராமுன் தாங்கி நீர் அதிகம் வருங்கால் முழுதும் நீங்கும் மதகடைக்கும் கற்குவில் போன்றது.

822- தமக்கு உற்றவர் போலிருந்து உறாதவரின் உறவு பொது மகளிரின் மனம் போல வேறுபடும்.

823- பல நீதி நூல்களைக் கற்றவராயினும் நல்ல மனமுடையவராகப் பழகும் நட்பு பகைவர்களிடம் காணமுடியாது.

824- கண்ட பொழுது சிரித்து மனதுள் வஞ்சகத்தை வைத்திருப்பவரிடம் நட்புக் கொள்ள அஞ்சவேண்டும்.

825- உள்ளத்தில் உறவு கொள்ளாதவரைச் சொல்லிலும் செயலிலும் நம்புவது முறையுடையது அல்ல.

826- நண்பரைப் போன்று நல்லதையே சொன்னாலும் பகைவர் சொல்லில் நன்மை இல்லை. ஆகையால் அதை ஆராய வேண்டும்.

827- வில் வளைந்தால் தீமை உண்டாகும் அதுபோலப் பகைவரின் சொல் வணக்கம் தீமையை உண்டாக்கும்.

828- பகைவர் தொழுத கையின் உள்ளும் அழுத கண்ணீரின் உள்ளும் ஆயுதம் மறைந்து இருக்கும் என்பதை உணரவேண்டும்.

829- புறத்தில் நட்பும் அகத்தில் பழிப்பும் உள்ளவரிடம் நாமும் நட்பில் நகைத்து உள்ளப் பழிப்பைச் சாரும்படிச் செய்ய வேண்டும்.

830- பகைவர் நண்பராக நெருங்கும் காலத்தில் முகத்தால் நட்புக் கொண்டு அகத்தால் விலகிப் பின் அதையும் விடவேண்டும்.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## பாய்ச்சல்:-

மரத்தை வெட்டி வீழ்த்திவிட்டுக் கோடரியும் கயிறும் விறகுவெட்டிக்குப் பக்கத்தில் மனம்விட்டுப் பேசிக்கொண்டிருந்தன. காட்டுக்குள் நுழைந்த ஒரு மங்கொத்திப் பறவை மாறி..மாறி நான்கு மரங்களைத் தன் அலகால் கொத்திவிட்டுப் பறந்து போனது. "இந்த மரங்கொத்தியைப் பார்த்தாயா?.. நான்கு மரங்களை மாறி..மாறித் தன் அலகால் வெட்டியது. ஒரு மரத்தை யாவது அதனால் வீழ்த்த முடிந்ததா?.." என்று கயிற்றைப் பார்த்துக் கேட்டது கோடரி. "மரங்கொத்தியால் அது முடியாது" என்றது கயிறு. "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" கயிறு சொன்னது...

**"நாலு மரத்தையும் வெட்டுகிறவன் ஒரு மரத்தையும் விழத்துவதில்லை'**

## முனைப்பு:-

காலைப் பனி.. கொக்கும் குருவியும் குளிரால் நடுங்கின. தங்களுக்குள்ளேயே பேசி அவை ஒரு முடிவுக்கு வந்தன. "இன்று நான் குளத்துக்குப் போவதில்லை. வேண்டுமானால் மீன் இங்கே வரட்டும்" என்றது கொக்கு. "நானுந்தான் தோப்புக்குப் போவதில்லை வேண்டுமானால் பழம் இங்கே வரட்டும்" என்றது குருவி. பொழுது கரைந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. நடுப்பகல் தாண்டிய பின்பும் பசியை எப்படித் தாங்கிக்கொள்ள முடியும். கொக்கு குளத்துக்குப் போனது..குருவி பழத்துக்குப் போனது. மரத்தில் இருந்த அணில் பாடியது..

**"'கொக்கைத் தேடி குளம் வராது...குருவியைத் தேடிப் பழம் வராது'**

# குறுக்கெழுத்துப்போட்டி - 212
## (ஆடி - ஆவணி 2026)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ

01-05 ஆடிமாதம் (2026) ஒரே நாளில் இலங்கையில் இங்கு இடம்பெற்ற சம்பவத்தில் 30 பேர்வரை கொல்லப்பட்டனர்.

12-14 இலங்கையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரம் ஒன்று.

26-27 மனிதர் இதைக் குறைத்துக் கொண்டால் நல்வாழ்வு கிட்டும்.

29-33 வாழ்வியலுக்கு வழிவகுத்த நூலை எழுதியவர்.

37-38 மனிதவாழ்வு சிறக்க ஏதாவது ஒரு இதைப் பயிலல் அவசியம்

43-46 அழகுசாதனப் பொருள் ஒன்று.

வ-இ

07-05 பெருநிலங்களில் ஒன்று

12-09 ஏழைகளின் வாழ்வு எப்போதும் இந்த வாழ்வுதான்.

19-16 ஆசியாவில் பணக்கார நாடு.

26-23 இருக்கையை இப்படியும் அழைக்கலாம்

கீ.மே

20-13 தமிழர்கள் கல்வியை இந்த உறுப்புக்கு ஒப்பிடுவார்கள்.

26-05 அறுபத்திநான்கு கலைகளின் பெயர்

47-33 விதை நல்லதானால் இதுவும் நல்லாய் வளரும்.

48-27 தமிழரின் பாரம்பரிய இசைகளில் ஒன்று.

மே-கீ

01-36 இலங்கையில் பெரும்பான்மை இனத்தவர்கள்.

07-21 ஆரம்பம் இருந்தால் இதுவும் இருக்கும்.

28-49 சில சிற்பிகள் இதிலும் அழகான சிற்பங்களை வடிப்பார்கள்.

32-46 சிலர் இது வேண்டியும் பணத்தைச் சேர்ப்பார்கள்..

**(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)**

## சந்திரன் என்னும் திங்கள்..

மார்கழியில்தொடங்கிய திங்கள்
ஊர்க்களிப்பில் தங்கிய சந்திரன்
சிறுவரைத் தூங்க வைக்கும்
அம்புலி மாமியே! சிவப்பு
வர்ணப்பட்டாடை உடுத்தி
சீவிச் சிங்காரித்து
மேகக்கூட்டம் முக்காடிட்டிட
சுழன்று சுழன்று வந்திடவே

வான்தேரில் உன் பங்காளி
விண்மீன்கள் சுற்றிட நீயோ
வெட்கித் தலைகுனியத்
தொற்றிடுவோர் கண் கூசிடும்
பூரணச்சந்திராவே மெல்ல
மெல்ல குளிர்மேனி தொட்டுத்
தொட்டு நடந்திட

உன் மென்னடைப் பார்வை பட்டு
தன்னடை கெட்டு மயங்கிடும்
சூரிய பகவானோ ஒளிர்ந்து
இருந்து நோக்கிடவே முழுமதி
நிலா வெட்கத்தில் தேய்ந்து
பாதி முகமாகி
அரைமதியானாளோ
சந்திரன் எனும் திங்கள்.

## நெஞ்சம் மறக்குமா?..

கடந்த காலம் நடந்தது
நினைக்கையில் கனத்த
நெஞ்சம் மறக்குமா..

தொடர்ந்த கோலம் முடைந்த
அனர்த்தங்களில் சனத்தைத்
தீர்த்த வஞ்சம் மறக்குமா..

படர்ந்த இன அழிப்பும்
வான் குண்டு வெடிப்பும்
சிதறிய உடலமும் உதறிய
குருதி உறைந்து அறைந்த
பசுமரத்தாணி அறுக்குமா...

கொஞ்சமும் ஈவு இரக்கமின்றி
பஞ்சமா பாதகரின் நரக வாழ்வு
அஞ்சி அஞ்சி வீதியில் விதியோடு
நீதிகேட்டு மதிமயங்கும் சதிகள்
துறக்குமா...

விடிவில்லாது கடிவாளம் போடும்
முடிவில்லாத அரசுகளோடு
போராடித் தவிக்கும் மானிடம்
நெஞ்சம் மறக்குமா?..

**ராணி சம்பந்தர் - யேர்மனி**

# ஆடி வந்த வேளையில்...

இராஜேஸ்வரி சிவராசா - யேர்மனி

ஆனி கழிந்து சிறப்பாய் ஆடியும் வந்திடும்
ஆடி விதை தேடியே நிலத்தில் விதைத்திடவே
ஆக்கிய பயிர்கள் செழிப்புற்று ஓங்கிடவே
ஆரோக்கிய வாழ்வினைத் தேடியே ஆடி வந்திடும்!...

ஆலய மகோற்சவங்களின் ஆரவாரம் ஒலித்திடும்
ஆசிரிய மாணவர்க்கு பள்ளி விடுமுறை வந்திடும்
ஆடிப் பாடி உறவு நட்புக்களோடு பொழுது போக்கிடும்
ஆனந்தமாய் கூடியே கொண்டாட ஆடி வந்திடும்!..

ஆடிப்பிறப்பும் தமிழர் திருநாளாய் வந்துதித்திடும்
ஆடி அமாவசையும் இறந்த தந்தையின் நினைவாய்
ஆதவனின் வெப்பம் அகோரமாய் வாட்டிடும்
ஆறுதலுக்காக நீர்நிலைகளை நாடி ஓட ஆடிவந்திடும்!...

ஆறுதல் ஓய்வுக்காய் மரநிழல் தேடியே மனம் ஓடும்
ஆயிரமாயிரம் மலர்களின் அழகும் மனம் பதிக்கும்
ஆரவாராமாய் தேனீக்கள் தேன் குடித்து ரீங்காரமிடும்
ஆனந்த வாழ்வு யாவர்க்கும் அமைந்திட ஆடிவந்திடும்!..

# கறுப்பு வைகாசி...

கறைபடிந்த வைகாசி மாதம் முள்ளி
வாய்க்காலில் முடிந்த சம்பவம் நச்சுக்
குண்டுகளால் கொலையுண்டோர்
பலர் பொஸ்பரஸ் நச்சுப் புகையா
ல் சுவாசித்து மடிந்தோர் இன்னும்
பலர் எறிகணை வீச்சுக்களால்
எரிந்து காயப்பட்டும் அநேகர்
தாயின் மார்பில் பால் குடித்தபடி
தாய் உயிரை மாய்த்த அவலம்
அன்னையுடன் மடியில்மரணித்த
குழந்தைகள் கைகால் இழந்தவர்கள்
கருகி மாண்டவர்கள் அங்கவீனப்
பட்டவர்கள் சொல்லிலடங்கா
தண்ணீர் கிடைக்காத சமயம்
தாகம் தீர்க்க உப்புக் கடலோ
ரம் நாவறண்டு அழுது குளறி
உயிர் போனோர் பலர் வெள்ளைக்
கொடியுடன் சரண்டைய
போனவர்கள் துவக்குக் குண்டால்
சங்காரம் செய்தவர்கள்
வல்லுறவில் நிர்வாணமாக்கி
வதைத்து கொன்றார்கள் எம் இன
மக்களை அளிக்க இலட்சத்துக்கு
மேலான உயிர்களை கொன்று
குவித்தனர் முள்ளி வாய்க்கால்
என்பது முடிவல்ல ஆரம்பம்
என்றும் முடிவல்ல உயிர்கள்
அழிந்தாலும் தமிழர் உரிமை
அழிவதில்லை...

ஜெயா நடேசன் - ஜேர்மனி

## மூத்தோர்....

முன்னுரிமை கோலோச்சி
பின்னுரிமை ஈடேற்றி....
மண்ணுரிமை தலையெடுக்க
வழிதொடுத்த பரம்பரை
ஆளுநரே..... பாங்கான பதவி
உயர்வினில் மூத்தோர்....
தாங்காத தளர்வாகி தடம்புரளும்
கதியே விதியாகிட..... வேண்டாத
வெட்டுக்களாக சீண்டும்
சொல்லாடல்.... தாண்டும்
காலங்களே மீண்டுமாக
வேண்டாமே வாழ்வென்றாகுமே....
சீர்தூக்கி சிரம்தூக்கி வாரிசு
வடம்பிடித்து.... பாருக்குள்ளே
பவனியாம் காலமுள்ளவரை
நிஜமான சரிதம்.... ஏறுவரிசை
இறங்குவரிசை தேறுதலுக்கான
ஒருவரிசை.... தேர்வின்றி
களமற்று ஊரின்றி போனதாலே....
முன்னாள் எந்நாளாகும் அந்நாள்
ஆக்கிவைத்திட .... மனிதமே
நேயமாகிட மாண்புடன் சமூகம்...
மதித்ததோர் முதியவர் மண்ணிலே
எண்ணியபடி நீடூழி வாழ்வாங்கு
வாழ்வார்.... நன்றி வணக்கம்.

**சர்வேஸ்வரி கதிரித்தம்பி**

**யேர்மனி**

## பிரிவு...

புரிதல்கள் தூரமானதால்
புறந்தள்ளப்படும் உணர்வுகள்
பங்கசுக்களும் காளான்களாயும்
பரிவே சிதிலமாகும்

விடியல்களின் நொடிகள்
விவாத மேடையாகி
நித்தியமும் ரணகளமாக
நிறுத்தல் குறியாய்
நிலைமாற்றுது பிரிவு!

புற்றென்றால் அறுத்துப்
புனருத்தாரணம் செய்தல்
வெற்றிப் பாதைக்கு
வித்தாகி நிற்கும்!

மனமென்னும் குரங்கின்
மயக்கத் தாவல்களில்
பற்றை அறுக்கும்
பச்சோந்தித் தனங்களால்
பரிதாபம் ஆகும்
பாச வலைகள்!

ஆத்மார்த்தமான உறவாய்
ஆராதித்தித்தவை பொய்யாக்கி
நம்பிக்கை சிதைக்கையில்
உலகமே நரகமாகி
அத்தனையும் உதறிப்
புதைந்திடத் துடிக்கும் மனது!

அத்தனையும் பொய்யாய்
உயிரற்ற கூடாய் உலவி
ஆட்டிவைக்கும் பிரிவின் வலி!

பிரிவுகள் இல்லாப்
பிணைதலே இன்பம்
விரிசல்கள் காணாப்
புரிதலே பேரின்பம்!

**கீத்தா பரமானந்தன் - யேர்மனி**

## தாய் நாட்டில்...

இனிமைக் காற்று
பசுமைப் புல் வெளி
மனித மனங்களில் மாறா நேசம்
குதூகலித்திருந்த ஆனந்தம்
அனைத்தும் - சல்லாபமிட்டது
மண்ணுக்குள் புதையுண்டு
போகத்தானோ?
எத்தனை ஆசைகள்
எத்தனை கனாக்கள்
அத்தனையும் முறியடிக்கப்பட்டதன்
தாற்பரியம் தான்
எங்கள் சிறார்கள் அறிவரோ?
யாரும் அறியா வண்ணம்
மண்ணுக்குள் புதைக்கப்பட்டு
காணாமல் ஆக்கப்பட்டதில்
உண்டோ நியாயம்.
எத்தனை வெற்றுடல்கள்
எத்தனை கை பொம்மைகள்
ஒவ்வொன்றும் கதை சொல்லும்
தம் மீதான அடக்குமுறையை.
கூடி வாழப் பாக்கியம்
இல்லை என்று
கருதித்தானோ - எம்மைக்
குடும்ப சகிதமாய்ப் புதைத்தனர்.
திறக்கும் விழிகள்
மூடத்தான் வேண்டும்
எனக்கருதினரோ - யான் அறியேன்.
நான் தான்

**இராசரெட்ணம் திவியா**

**தமிழ் சிறப்புக்கற்கை மாணவி**
**தமிழ் கற்கைகள் துறை.**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**
**மட்டக்களப்பு**

## அன்னை தெரேசா..



**( 26.08.1910 - 05.09.1997 )**

வாழ்வின் வரம் பெற்றுயர்ந்தீர்
வறுமைக்கு முன் நின்று
காத்திட்ட பெருமை மகிமை
கருணையின் பெரும் சக்தியாய்
காத்து நின்ற தாயுள்ளமே
வீழ்ந்திடாது பலரை எழ வைத்த
சக்தியிவர் ஆதரவாய்,அனுதினமும்
வலுவூட்டிய வள்ளலிவர்!..
தாய்மைக்கு
நிகரேது தனித்துவத்தின்
மதிப்பேது
நொந்து தினம் வாடி நின்றோர்
நோயாலே மடிந்தோரை எள்ளி
நகையாடது ஏதிலிகள் பலர்
காத்த கருணையின் பெரும்பேறு
வாழ்வின் வழிகாட்டி வரமீர்ந்த
தாயுள்ளம் காத்தே கரம்நீட்டி
அன்பின் மலர்ச்சியில்
அரவணைத்த பெருபேறு
மனித நேயத்தை மண்ணில்
நிலைநாட்டி வளர்த்த
தாய்மையிவர் வையம் போற்றும்
வள்ளல் தாயே கருணையின்
கலங்கரைத்தாயே!..

**வசந்தா ஜெகதீசன்**
**யேர்மனி**

# ஆடிக் கலவரம்....

- இரா சம்பந்தன் -

கொட்டுகின்ற அருவிகள்
குதித்தோடும் நிலத்தினிலே
வெட்டுகின்ற பகையால்
குருதி வழிந்தோடியது எப்படி ?

பசுமை படர்ந்த பூமியிலே
வெறுமையும் விரோதமும்
மூண்டெழுந்தது எப்படி ?

அலைகடல் தாலாட்டும் தீவினிலே
தலைகளைக் கொய்து
விலையில்லா உயிர்களுக்கு
விலைவைத்த விரோதம்
எப்படி கருக்கொண்டது ?

சரித்திர காலமுதல்
சதிகாரக் கும்பல்
வகுப்புவாதம் பேசியே
வளங்கொழிக்கும் தேசத்தின்
நலத்தை யழித்தது .

அவ்வப்போது அதிகார வர்க்கம்
இனக்கல வரங்களைத் தூண்டி
ஆட்சி யதிகாரங்களைத்
தக்கவைத்துக் கொண்டன !

வேரோடிய தமிழரின் பொருளியலை
வேரோடு சாய்த்துவிட
திட்டம் தீட்டியவர்கள்
ஆடிக்கலவரத்தை யரங்கேற்றினர்.
வாழ்வுதான் இனிக்குமா ?

பற்றியெரிந்தன தமிழரின் மனைகள்
கடைகள் உடைமைகள் வீதியிலே
தமிழர் இழுத்துவரப்பட்டு
எண்ணெய் முழுக்காட்டப்பட்டு
எரியூட்டப் பட்டனர் .

தீயின் சுவாலைகள் தமிழரின்
சொத்துக்களைத் தின்று தீர்த்திட
கரும்புகை யெழுந்து
வானத்தை யளாவி
மேகத்தை மறைத்தன .

பொற்புடை மாதரின்
கற்பினைப் பறித்த காடையர்கள்
மிருகங்கள் புசிப்பது போலவே
மாமிசம் புசித்தனர் !

வன்புணர்வை விரும்பியவர்
ஒருகணப்பொழுது தத்தமது
தாய் , தங்கை , தமக்கை போன்றோரை
எண்ணிப் பார்த்திருந்தால்
கண்ணியம் தவறி யிருப்பார்களா ?

ஒரு தாய் வயிற்றில்
பிறந்தால் மட்டுமா சோதரர்கள் ?
ஒரு தேசத்தில் பிறந்தாலும்
அவர்கள் சோதரர்களே !

ஆறாத வடுக்களையும்
மாறாத காயங்களையும்
ஆடிக்கலவரம் அன்று விதைத்ததால்
அழிவுகள் தொடர்ந்தன !

காயங்களை யாற்றிவிடக்
கை மருந்து என்றுமுண்டு !
பூட்டிக் கிடக்கும் கதவுகளின்
திறவுகோல் உங்கள் கைகளிலே
மனக்கதவைத் திறவுங்கள்
புத்தொளி பரவட்டும்!...

# பாரதிராஜாவுக்கு இறுதி அஞ்சலிப் பா!..

**ப பசுபதிராசா - யேர்மனி**

பாராதிராஜா தமிழ்ச்சினிமாவில் பழமைதாண்டிப்புதுமை தோண்டிவந்த சுயம்பு
விதி மீறாமல் விண்வரும் பருதியாய் கொடுமைகள் மேல் விழிந்த குளம்பு
சதிகளால் தடுத்துவி முடியா கருத்துச்சுவை நிறைந்த கட்டிக் கரும்பு
மதி இழந்த பேரைக் கேள்வி கேட்டு சமரசமின்றிச் சண்டைசெய்த பொறுப்பு..

சுய சாதிப் பெருமையினைத் தோல் உரித்துச் சமூகமாற்றம் கண்டவர்ராஜா
எழுபதுகளில் இசைவடிவம் ஜனரஞ்சனை ஆளுமை பெற உழைத்த ராஜா
பாடல் வரிகளைத் தேடல் வழிகளாக்கி மாடல் செய்த கவிவைரமுத்துஎன
முப்பெருமாண நடைபோட்டு ஒன்று சேர்ந்து வந்த கலைக்கனிகள் இவர்கள்..

மண்ணோடு ஒடடிக்கிடந்த வாசனையை மனதோடும் பேசிய நாயகன்
கண்ணோடு முத்தமிட்டுக்கிடந்த பண்பாட்டு விழுமியங்களின் பாடல் சித்தன்
பெண்ணோடு கட்டிப்போராடிய பேதமையை நம்மோடு நயந்த நவீன சீலன்
விண்ணோடு சேர்ந்தது உடலாகலாம் நீ எம்மோடு இருக்கும் இமயம்...

பார்ப்பனர் மேட்டுக் குடியின் மூளைச்சலவைக்குள் மூழ்கிய தமிழ்ச்சினிமாவை
பணக்கார இடைநிலைச் சாதிகளின் பணப்பயிர் செய்யும் செயலைத்தகர்த்து
நடைமுறை மக்களைக்கட்டித்தழுவி எழும் சார்புகளின் நினைவைப் பாடாக்கி
மடைதிறந்த வெள்ளமாய் அமைத்து வெற்றிகண்ட தனி ஆளு உன்வரலாறு...

ஒரு படைப்பாளி படைப்பின் பெறுமானங்களோடு மட்டும் நின்றுவிடாமல்அதன்
சமூகப் பயன்பாடு கருதிய செயல்களுக்கும் ஆரோக்கியமாக இருக்கணும்
உள்ளூர் அரசியல்ப் போராட்டங்களில் தன் பங்களிப்பைப் பகிர்ந்து - ஈழ
உறவுகளுக்கான நியாக்கோரிக்கைகளுக்கு ஆதரவாக நின்று உழைத்தவர்...

தான் வாழ்ந்த காலத்தைப் பதிவுகளாக்கி அடையாளம் பதிக்கும் தென்னை
உன்னிலிருந்து ஆயிரமாயிரம்சிந்தனைபெற்றவாரிசுகள் காப்பாற்றும்மண்ணை
வசதியாகும் வாய்ப்புகள் வந்தும் கலங்காது காத்தாய் கருத்துக் கண்ணை
நீங்கள் செய்த செயலால் மக்கள் என்றென்றும் மறக்கமாட்டார் உன்னை!..




# இதழ்:237- மண் சஞ்சிகை அட்டைப்படக் கவிதை: காலம் தன் கணக்கெழுதி போய்விடக்கூடும்

கால்கள் இதைக் கடந்து தான் போய்விடுமா
கோலமதுவாய் குவலயமும் அழித்திடக்கூடும்
கொடுமைகளை நெஞ்சத்தில் மழித்திடலாமோ
ஞாலமிதைச் சரித்திரமாகவும் வரையக்கூடும்
நாங்களிதை எங்ஙனமாய் கரைத்திடுவோமோ

நள்ளிரவில் உயிர்குடித்த கொடுமை தானென்ன
நாலாயிரமுயிரை நச்சுப்புகையில் கொன்றதென்ன
முள்ளிவாய்க்கால் குருதிக்குள் அமிழ்ந்ததென்ன
முடிந்த கதையாய்ச் சிங்களமும் குதித்ததென்ன
வெள்ளைக்கொடி விவகாரமிப்போ கசிவதென்ன
வேங்கைகளின் இலட்சியங்கள் வெந்திடுமாமோ

வைகாசி பதினெட்டுத்தான் இனி வற்றிடாதோ
வருந்தலைமுறை விடுதலையைப் பற்றிடாதோ
பொய்யர்களின் சூழ்ச்சிகளினிப் பொசுங்கிடாதோ
புதைந்தவர்க்காய் நீதியும் நியாயம் புரிந்திடாதோ
மெய்யுரைத்திட மேற்குலகும் துணிந்திடாதோ
மேதினியில் தமிழரினுரிமை வென்று விடாதோ

**-அம்பலவன்புவனேந்திரன்..**

# எரித்துப்போன எண்பத்திமூன்று ஆடி...

எண்பத்தி மூன்று ஆடியின்றும்
எழுதித் தீர்ந்திடா வேதனையில்
புண்பட்ட நெஞ்சினிலின்று வடியும்
புரையோடிய வடுக்களில் குருதி

மண்ணெலாம் குருதி வயல்கள்
மரித்துப்போன தமிழரின் உடல்கள்
எண்ணிக்கை இல்லா மனைகள்
எரிதழலினுள் உயிர்க் கொலைகள்

பெண்புரசு வீதிகளில் மானபங்கம்
பிள்ளைகள் பீதியிலலறி அஞ்சும்
எண்ணிட முடியாதவிக் கொடுமை
எரியுண்ட அவலத்தின் மிடிமை

உண்மைகள் உறைந்தே போனது
உலகமும் உறங்கியே கிடந்தது
விண்தொட உடைமையும் எரிந்தது
விழாவாகச் சிங்களமோ குதித்தது

கண்தோண்டி சிரித்ததொரு கூட்டம்
காடையர் ஏவலில் மதுக் களியாட்டம்
மண்ணின் முதற்குடிகள் அகதிகளாக
மரிப்புக்கும் நடுவினிலே சகதிகளாக

திண்டாடும் ஏதிலியாய்த் தமிழரினம்
தெருவெங்கும் மானிடக் குருதிவெள்ளம்
கொண்டாடியது சிங்களத் தீவிரவாதம்
கொலைக் களமானதன்று ஈழதேசம்...

**அம்பலவன்புவனேந்திரன்**

# ஹைகூக் கவிதைகள்.. (துளிக்கவிதைகள்)

**பொருள்:- சமகால அரசியல்**

01-இந்தச் சாக்கடையில்
எந்தத் தவளை
புனிதமாகின்றது
சமகால அரசியல்...

02-இலவசம் என்பதாலோ
இதுவும் அள்ளி..அள்ளி
வீசப்படுகின்றன
தேர்தல் வாக்குறுதிகள்...

03-வாக்களிக்கும் உரிமை
இல்லார்க் கெல்லாம்
வழங்கப்படுகின்றது
தானமாக இலஞ்சம்...

04-மாப்பிள்ளை வேடம்
கச்சிதமாய் பொருந்துகின்றது
எல்லார்க்கும்
தேர்தல் பிரசாரத்தில்...

05-யானை முட்டைகளை
அடைகாக்கின்றதாம் எறும்புகள்
எறும்புகளின் அரசியல்...

06-தேர்தல் காலத்தில்
தொட்டுக் கொள்ளும்
ஊறுகாய் மாங்காய்த்தீவு...(ஈழம்)

**கவிதாயினி
ஆரையூர் தாமரை
யோமனி.**

# நீடித்த நினைவில் நிலையாய் அவள்....

வே. புவிராஜ் - நோர்வே -

நீண்ட பயணத்தின் பின்னும்
அவள் நினைவுகள் விழுது விட்டு
தொடர்கிறது. கற்பனையில் கதை
பேசி கனவுகளில் உறவாடி
நினைவுகளில் கைகோர்த்து
தனிமைகளில் ஒருமித்து
காலங்களில் வசந்தத்தை
அனுதினம் காண்கிறேன்.
அவள் வளர்ந்து வரும் நிலவென
நான் கைகோர்த்து உலவுகிறேன்
கற்பனையில் மிதந்து தினம்
விண்மீனை தொடுகிறேன்.
பள்ளிப் பகில் பருவகாலம் பசி
மறந்த பொற்காலம். சூதுவாது
வஞ்சம் இல்லை அஞ்சுதற்கு
ஏதுமில்லை. களவு காதல்
மொய்க்கும் முன்னே நான் கண்ட
முதல் தேவ லோக தேவதை.
பள்ளியில் துள்ளும்மான்.
புள்ளி வைத்த வெண்மையில்.
பள்ளியறை சீருடையில்.
தரை உலவும் வெண்ணிலா.
கண்ணிமைக்க மறந்ததுண்டு
கனவுகளில் மிதந்ததுண்டு ஆழி
அலை ஆர்ப்பரிக்கும். அவள்
ஆழ்மனதை நான் அறிய தவம்
தரித்து நின்றதுண்டு. அதில் நான்
ஞானம் பெற்று மீண்டதில்லை.
புத்தகத்து ஒப்பனைகள்
கற்றுத்தரா கற்பனைகள் . அவள்
கண்ணழகில் கவி சுரக்கும்
சங்கத்தமிழ் ஊற்றெடுக்கும்.மேல்
வகுடு பிரித்து எடுத்து பின்னல்
இட்டு பூ முடித்து. தாவணியில்
பூ மலர்ந்தாள் மனம் தவிப்பதற்கு
வழி சமைத்தாள்.

நேர்த்தி வைத்து காத்திருந்தோர்
வரிசையில் நான் முதலடம்.
நேற்று இன்று நாளை என்றும்
நெஞ்சில் வைத்தேன் முதலிடம்.

நான் பார்க்கும் எல்லா
பார்வைக்குள்ளும் பாவை

உந்தன் பூ முகம். தொன்று

தொட்டு வந்தது போல்

என் நெஞ்சில் பூர்த்து நிக்கிறாள்.
குகை ஓவியக் கலை அவள்.
குபேரனுக்கு மகளவள். சிலை
வடித்ததார் என் மனம் சிறைபிடிக்க.
விலை கொடுக்க முயன்றேன் எனைக்
கொடுத்தேன். கம்பன் அவன் காவ-
ியமும் இளங்கோவின் காப்பியமும்.
முன்னெழுந்து நிற்கும் கதை
கற்பனையே அவர் இன்று வரை
வாழ்ந்திருந்தால்.

இப் பேரழகை போற்றி ஒரு
காவியத்தை வரைந்திருப்பார்.
இலக்கணத்து வரி கூடும்
இலக்கியங்கள் போராடும்
காப்பியத்து வரிசையிலே இன்னும்
பல சேர்ந்திருக்கும் கம்பன் கவி
காளிதாசன் இளங்கோ என்னும்
ஆளுமைக்கு இது வாய்க்கவில்லை
இவள் பேரழகை காண்பதற்கு....

# ஆன்மீக பயணம்..............

## சென்ற இதழ் தொடர்ச்சி...

நாங்கள் Hotel க்கு வந்து குளித்து உடை மாற்றி காலை உணவு உண்டபின், எங்களை முகவர் வந்து காசி விஸ்வநாதர் கோவிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு பிராமணரை ஒழுங்கு செய்திருந்தார். அவர் எங்களுடைய Handy. Bag எல்லாம் ஒரு லாக்கரில் வைத்து விட்டு, நடந்து கோவிலுக்குச் சென்றோம். பிராமணர் எங்களிடம் நாங்கள் வெளிநாட்டிலிருந்து வந்ததாகச் சொல்ல வேண்டாம், தமிழ்நாட்டிலிருந்து வந்த தாகச் சொல்லச் சொன்னார். ஆனால் அவருடன் சென்றதால் யாரும் எங்களை எதுவும் கேட்கவில்லை.

அவருடனே உள்ளே. சென்றோம் சென்றதும் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று சொல்லி துண்டு எடுத்து அர்ச்சனை செய்தோம். சில இடங்களில் அவரே அர்ச்சனை செய்தார். நிறையச் சனம் வரிசையில் நின்றார்கள். நாங்கள் அவருடன் சென்றதால் முன்னுக்கு சென்றோம். அங்கு ஆதி மூலம் சிவலிங்கம் தான். பின் ஒரு பக்கத்தில் ஏழு சிவலிங்கம் அப்படியே அவற்றிற்கு நீர் ஊற்றி வழிபட்டோம்.

அப்படியே வந்து ஒரு அம்மன் சன்னதியில் அர்ச்சனை செய்தார் இன்னுமொரு ஐயர் , எங்களுக்கு நூல் கட்டி விட்டார், அவரிடம் இன்னும் நூல் கேட்டு வாங்கினேன் . அதைக் கொண்டு வந்து இங்கு எல்லோருக்கும் கொடுத்தேன். அப்படியே கோவிலைச் சுற்றி வலம் வந்தோம். மிகவும் அழகாக, நிம்மதியாக இருந்தது . அதிக வெப்பம் என்றுமில்லை, மிகப் பெரிய வளாகம். எல்லோரும் வரிசையில் நிற்கும் போது நாம் மட்டும் நேரடியாகப் போய் பார்க்க முடிந்தது,

மகிழ்ச்சிதான் ஆனால் எங்களால் அவ்வளவு நேரம் நிற்க முடியாது. அது கொஞ்சம் வருத்தம் தான் என்றாலும் கடவுள் தரிசனம் கிடைத்தது மகிழ்ச்சி. ஆசீர்வாதம் தந்தாரா தெரியவில்லை. ஆனால் இங்கு வந்து வழிபட்டது மகிழ்ச்சி தருகிறது. ஒரு ஆத்ம திருப்தியை தந்தது. ஐயர் மகனின; Handy யில் சில படங்கள் எடுத்து தந்தார் அவர் மட்டும் படம் எடுக்கலாம். இப்படிக் காசி விஸ்வநாதர் எங்களை அழைத்துத் தன்னைத் தர்சிக்க வைத்தது என் பெரும் பாக்கியம் என்று எண்ணுகின்றேன்.

அடுத்த இதழில் தொடரும்.....

**கெங்கா ஸ்ரான்லி**
**யேர்மனி**

# யேர்மனியில்!...

## ஜேர்மனியில் பின்தங்கிய குழந்தை வளர்ப்புக்கான சூழ்நிலை: அதிர்ச்சியூட்டும் UNICEF அறிக்கை...

குழந்தை வளர்ச்சிக்கான சிறந்த சூழ்நிலைகள் கொண்ட நாடுகளின் பட்டியலில் ஜேர்மனி பின் தங்கி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியில் பின்தங்கிய குழந்தை வளர்ப்புக்கான சூழ்நிலை

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் OECD அமைப்பில் இடம்பெற்றுள்ள 37 நாடுகளில் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்(UNICEF) சமீபத்தில் ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளது.

இந்த ஆய்வின் முடிவில், குழந்தை வளர்ச்சிக்கான சிறந்த சூழ்நிலைகள் கொண்ட நாடுகளின் தரவரிசையில் ஜேர்மனி 25 வது இடத்தை பிடித்து இருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த பட்டியலில் பிரான்ஸ், டென்மார்க், நெதர்லாந்து ஆகியவை குழந்தை வளர்ச்சிக்காக சிறந்த சூழ்நிலைகளை கொண்டு இருப்பதோடு, பட்டியலிலும் முதன்மை இடங்களை பிடித்துள்ளது.

இந்த பட்டியலில் சிலி நாடு (Chile) கடைசி இடத்தை பிடித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனியில் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி...

ஆய்வில் ஜேர்மனியில் இளைஞர்களின் கல்வித் திறனில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டு இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் 60% மாணவர்கள் மட்டுமே வாசிப்பு மற்றும் கணிதத்தில் அடிப்படை தேர்ச்சி பெறுகின்றனர், இதனால் ஜேர்மனியின் எதிர்கால மனித வளம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.தற்போதைய தரவுகளின் படி, கல்வித் தரத்தில் 41 நாடுகளில் ஜேர்மனி 34 வது இடத்தில் இருப்பது கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## ஜேர்மன் குடியுரிமை வழங்கல் அதிகரிப்பு...

அதாவது, 2024ஆம் ஆண்டின் மத்தியப்பகுதியில் ஜேர்மனி குடியுரிமை விதிகளை எளிதாக்கியதைத் தொடர்ந்து, முந்தைய ஆண்டைவிட, அதாவது, 2023ஆம் ஆண்டைவிட 46 சதவிகிதம் பேர் கூடுதலாக ஜேர்மன் குடியுரிமை பெற்றுள்ளார்கள்.






## யேர்மன் குடியுரிமை

உண்மையில், 2024ஆம் ஆண்டை ஒப்பிடும்போது, 2025ஆம் ஆண்டில் குடியுரிமை பெற்றவர்கள் எண்ணிக்கை 6 சதவிகிதம்தான் அதிகம். 2024ஆம் ஆண்டில், 291,955 வெளிநாட்டவர்கள் ஜேர்மன் குடியுரிமை பெற்றார்கள்.

என்றாலும், 2025இல் 309,852 பேர் குடியுரிமை பெற்றுள்ளதே, இதுவரை வெளிநாட்டவர்கள் ஜேர்மன் குடியுரிமை பெற்றதில் மிக அதிக எண்ணிக்கை ஆகும். விடயம் என்னவென்றால், இன்னமும் ஆநுஉமடநநெரசப-ஏழசிழஅஅநசெ மற்றும் ளுயஒழலெ-யுெயடவ மாகாணங்களில் குடியுரிமை பெற்ற வெளிநாட்டவர்கள் எண்ணிக்கை வெளியாகவில்லை.

அதேபோல, Lower Saxony , Saarland மற்றும் Schleswig-Holstein மாகாணங்களில் குடியுரிமை பெற்ற வெளிநாட்டவர்கள் எண்ணிக்கையும் முழுமையாக கிடைக்கவில்லை. அப்படி அந்த எண்ணிக்கைகளும் சேரும்போது, 2025ஆம் ஆண்டில், குடியுரிமை பெற்றவர்கள் எண்ணிக்கை மேலும் அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## யேர்மனியில் கோடீஸ்வரர்கள்

அதிக எண்ணிக்கையிலான கோடீஸ்வரர்கள் வாழும் நாடுகள் பட்டியல் ஜேர்மனியில், 13 மில்லியன் மக்கள் வறு மையில்வாழ்வதாக தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு ஒன்று தெரிவித்துள்ளதாக சமீபத்தில் ஒரு செய்தி வெளியானது. இந்நிலையில், அதிக எண்ணிக்கையிலான கோடீஸ்வரர்கள் வாழும் நாடுகள் பட்டியலில் ஜேர்மனி மூன்றாவது இடத்தில் உள்ளதாக மற்றொரு செய்தி வெளியாகியுள்ளது.

நம் நாடுகளில் பொதுவாக நாம் கோடீஸ்வரர் என்னும் சொல்லை பயன்படுத்தினாலும், மேலை நாடுக-ளில் மில்லியனர், பில்லியனர் என்னும் பதங்களைப் பயன்படுத்து கிறார்கள். அவ்வகையில், அதிக மில்லியனர்களைக் கொண்ட நாடுகள் பட்டியலில் ஜேர்மனி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.பட்டியலில் முதல் இரண்டு இடங்களை, முறை-யே அமெரிக்காவும் ஜப்பானும் பிடித்துள்ளன.





# ஆடற் கலை அரங்கேற்றம்...

நாட்டியக் கலாஜோதி சாருஜா சதீஸ்குமார் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 28.4.26 அன்று யேர்மனி Erftstadt Tunich நகரில் நடைபெற்றது. இவர் இங்கு பிறந்தவர் , இவர் பரதக் கலையை எட்டு ஆண்டுகள் பயின்று, உண்டன் கீழைத்தேச நுண்கலைக் கழகத்தில் (OFAAL) (Oriental Fine Arts Academa in London) நாட்டியக் கலாஜோதிப் பட்டம் பெற்றவர். அத்துடன் தமிழாலயத்தில் தமிழ்மொழி கற்று 12 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்,

இவருடைய. குரு கலைவித்தகி சிறீமதி. அபிராமி சிவநாயகம் இவருடைய முதல் அரங்கேற்றமாகும் இங்கு பிறந்து வளர்ந்து திருமதி. அமலா அன்ரனி சுரேஸ்குமாரிடம் பரதநாட்டியம் கற்று நாட்டியக் கலாஜோதி பட்டம் பெற்றவர், அத்துடன் ஆற்றுகை தரத்திலும் தோன்றி நல்ல சித்தி பெற்றவர். அத்துடன் தாய்மொழியாம் தமிழைக் கற்றுத் தேறியவர். எனவே இங்கு மூன்று தலைமுறை களம் கண்டது மகிழ்ச்சி.

கலைவித்தகி சிறீமதி. அபிராமி சிவநாயகத்தின் மாணவி யின் அரங்கேற்றம். வழமை போல முதலில் அரங்கேற்ற மாணவி ஆசியர் சகமாணவிகள் , பெற்றோர் உறவினர், அழைத்து வந்தனர். 3.30 மணிய ளவில் பூஜையுடன் ஆரம்பமாகியது. குரு ஆசியுடன் சலங்கை கட்டுதல் இடம்பெற்றது. பின் மங்கல விளக்கேற்றல் ,அகவணக்கம இடம்பெற்றன,

ஆசியுரை வழங்கிய டோட்முண்ட் சிவன் கோவில் ஐயர் தெய்வேந்திரக் குருக்கள் வழங்க, அவரையும் கௌரவித்து, குருவையும் வணங்கி கௌரவிக்கப் பட்டது. அரங்கேற்ற நிகழ்வு ஆரம்பமானது விநாயகர் துதி பாடலுடன் தொடங்கியது. முதலாவது புஸ்பாஞ்சலி அருமை,

பின் வரிசையாக அலாரிப்பு, ஸ்லோகம், ஜதீஸ்வரம், ( உடை மாற்றி) கவித்துவம், வர்ணம என இடம் பெற்றன.

இங்கு முகபாவம் மிகவும் அச்சொட்டாக அமைந்தது சிறப்பு. கண்ணனின் கதை சற்று வித்தியாசமாக கண்ணனும் சேர்ந்து ஆடியது, ரசிக்கக் கூடிய வகையில் அமைந்தது. அபிநயத்துடன் கதை மிக்க அழகு , பதம்- உணர்வு பேசுகிறது , வேகம் குறைகிறது மாமயில் ஏறும் முருகன் பற்றி, வித்தியாசம் இடையில் சம்பாஷணை , முருகனல்லவா அருமை. கீர்த்தனம்- சக்தியாக உண்மையாகவே இருந்தது, உடையலங்காரம் அசுர-னைக் கொன்று குருதி குடித்தது நன்று,

சிறப்பு நடனம்- ஈழத்தின் கதை இதில் சிறப்பு ஈழம் வரைந்தது வித்தியாசமாகப் பாட்டுடன் நடனம் மலர் வரைந்தது. குருவின் சிந்தனை நன்றாக இருந்தது. மண்டபம் கரகோசத்தில் அதிர்ந்தது எனலாம். அவ்வளவு தத்ரூபமாக இருந்தது. இடையிடையே கௌரவிப்பு , வாழ்த்துரைகள், இடம்பெற்றன. நிறைவு தில்லானா- வேகம் , லயம் , ஆனந்தம் சிவன் ஆனந்தத் தாண்டவம். தாளம் மிருதங்கம் சமகாலம், பாதம் தாளம் ஒன்றாக சுதி விலகாமல் இணைந்தது சிறப்பு.

அணிசேர் கலைஞர்கள் அனைவருக்கும் கௌரவித்ததுஇளையோர்களின் அழகான அரங்கேற்றம் இன்றைய தலைமுறை வேறு கோணத்தில் பார்க்கும் பார்வை அருமை. இங்கு நான் சொல்ல வருவது யாதெனில் இப்படியான சிந்தனை அடுத்த தலைமுறைக்கு அதிக ஆர்வத்தையும் விளக்கத்தையும் தரும். எமது கலை கலாச்சாரம் தொடர்ந்து வளரும் என்பதில் ஐயமில்லை .

ஆனால் அடிப்படை மாறாது வெவ்வேறு யுக்திகளால் சில விடயங்களை எம் இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்ல ஏதுவாகும். இதை அடுத்த தலைமுறையினரும் புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன். கண்ணுக்கு குளிர்ச்சி மனதிற்கு மகிழ்ச்சி வயிற்றுக்கு உணவு தந்து எம்மை மகிழ்வித்த குடும்பத்தாருக்கும் நன்றி சொல்லி விடைபெற்றோம்!

**மதிப்புறு முனைவர் திருமதி. கெங்கா ஸ்ரான்லி - யேர்மனி**

..................................................................................................................................

**பொன்மொழிகள்..**

**பணம்:-** பிறகு செலவழிக்கலாம் என்று பணத்தைச் சேமிக்க முடியும் ஆனால்பின்னால் வாழ்ந்து கொள்ளலாம் என்று ஒரு நாளைக்கூட சேமிக்க முடியாது...

**கல்லும் பொன்னும்:-** அன்று இல்லங்கள் கற்களால் கட்டப்பட்டன. உள்ளங்கள் பொன்னாக இருந்தன. ஆனால் இன்று வீடுகள் பொன்னால் கட்டப்படுகின்றன. உள்ளங்கள் கல்லாகவே உள்ளன...



# " டிம்மி " உலகின் கவனத்தை ஈர்த்த திமிங்கலம்....

உலகம் முழுவதும் தினமும் பல விசித்திரமான மற்றும் அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. போர்கள் பல நாடுகளை உலுக்குகின்றன, தேர்தல்கள் நாடுகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்றன, மேலும் எபோலா மற்றும் ஹான்டா வைரஸ் போன்ற நோய்கள் உலக மக்களின் கவனத்தை ஈர்க்கின்றன. ஆனால், இவ்வளவு பெரிய உலகச் சம்பவங்களுக்கிடையில், 2026 பங்குனி மாதம் முதல் ஜேர்மனியில் ஒரு வேறு கதை மக்களின் மனதை கவர்கின்றது. அது டிம்மி என்ற ஹம்ப்பேக் (Buckelwal Timmy) திமிங்கலத்தின் கதை. பால்டிக் கடலில் வழிதவறிச் சென்ற இந்தத் திமிங்கலம் பல வாரங்கள் உயிர் பிழைப்பதற்காக போராடியது. அதன் சாகசமான பயணமும், அதை காப்பாற்ற மனிதர்கள் மேற்கொண்ட முயற்சிகளும், டிம்மியை ஜேர்மனியின் மிகவும் பிரபலமான விலங்குகளில் ஒன்றாக மாற்றின.

அதனது கதை 2026-ஆம் ஆண்டு பங்குனி 3-ஆம் திகதி தொடங்கியது அன்றுதான், பால்டிக் கடலில் (Ostsee) அமைந்துள்ள விஸ்மர் (Wismar) துறைமுகத்தில் அது முதன்முதலாகக் காணப்பட்டது. சொல்லப்போனால், ஒரு மீன்பிடி வலையிலிருந்து அது விடுவிக்கப்படவேண்டிய சூழல்கூட ஏற்பட்டது.அடுத்தடுத்த வாரங்களில், டிம்மி மீண்டும் மீண்டும் ஆழமற்ற கடலோர நீர்நிலைகளுக்குள் வழிதவறிச் சென்றது. பங்குனி 23 அன்று, டிம்மண்டார்ஃபர் கடற்கரைக்கு (Timmendorfer Strand) அப்பால் உள்ள ஒரு மணல் திட்டில் அது கரை ஒதுங்கியது.

சில நாட்களுக்குப் பிறகு, செயற்கையாகத் தோண்டப்பட்ட ஒரு கால்வாய் வழியாகச் சென்று, அது மீண்டும் ஆழமான நீருக்குத் திரும்பியது. இருப்பினும், சிறிது காலத்திற்குப் பிறகு, அது மீண்டும் கரை ஒதுங்கியது. இந்த முறை யேர்மனியின் ஒரு மாநிலமான மெக்லென்வோர்க் பொமரேனி யாவில் (Mecklenburg Vorpommern)உள்ள போயல; (Poel)தீவுக்கு அப்பால் காணப்பட்டது. அங்கே, ஊடகங்கள், மீட்புப் பணியாளர்கள் மற்றும் ஏராளமான பார்வையாளர்களின் இடைவிடாத கண்காணிப்பின் கீழ், அது பல வாரங்களாக ஒரு ஆழமற்ற விரிகுடாவில் சிக்கிக்கொண்டிருந்தது.

இது போன்ற ஒரு பகுதியில் ஒரு திமிங்கலம் இவ்வளவு நீண்ட காலம் உயிர்வாழ்வது அரிதானது என்பதால், வல்லுநர்கள் அதன் நிகழ்வை உலகளவில் விதிவிலக்கானதாகக் கருதினர். சித்திரை மாத இறுதியில், தனியார் நிதியுதவியுடன் செயல்படும் ஒரு மீட்பு முயற்சி, ஒரு பிரம்மாண்டமான நடவடிக்கையை முன்னெடுக்க, டிம்மி, நீரால் நிரப்பப்பட்ட ஒரு சரக்கு மிதவைப்படகில் ஏற்றப்பட்டு, பல நாட்களாக டேனிஷ் கடல் பரப்பின் வழியாக வட கடலை நோக்கி இழுத்துச் செல்லப்பட்டது.

வைகாசி 2, 2026 அன்று, டென்மார்க்கிற்கும் நோர்வேக்கும்(Dänemark-Norwegen) இடைப்பட்ட ”ஸ்காகெராக்” (Skagerrak) பகுதியில் அது இறுதியாக விடுவிக்கப்பட்டது. அங்கிருந்து அது மீண்டும் அட்லாண்டிக; (Atlantik) பெருங்கடலுக்குத் தன் வழியைக் கண்டறிந்து திரும்பும் என்று பலரும் நம்பிக்கொண்டிருந்தனர். இருப்பினும், அதன் பின்னரான அதன் நிலை என்னவென்று தெளிவாகத் தெரியவில்லை. அது விடுவிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே, அதனுடன் பொருத்தப்பட்டிருந்த ஜிபிஎஸ் டிராக்கர் (GPS Tracker) சமிக்கைகளை அனுப்புவதை நிறுத்திவிட்டது.

இதன் விளைவாக, டிம்மி எங்கே இருக்கின்றது என்றோ அல்லது அந்தச் சோதனையிலிருந்து அது தப்பிப் பிழைத்ததா என்றோ யாருக்கும்உறுதியாகத் தெரியவில்லை. மேலும், இந்த மீட்பு நடவடிக்கை சர்ச்சையை ஏற்படுத்தியது: சில வல்லுநர்கள் இதை ஒரு வாய்ப்பாகக் கருதிய வேளையில், மற்றவர்களோ பலவீனமடைந்த அந்த விலங்கிற்குத் தேவையற்ற மன அழுத்தத்தை ஏற்படுத்துவதாகக் கூறி விமர்சித்தனர்.

பிந்திய தகவல்களின்படி, டிம்மியின் கதை ஒரு சோகமான முடிவை எட்டியது. 2026 வைகசி மாதத்தின் நடுப்பகுதியில், டென்மார்க்கின் அன்ஹோல்ட் தீவு (dänische Insel Anholt)அருகே ஒரு இறந்த ஹம்ப்பேக் திமிங்கலம் காணப்பட்டது . இறந்த பிறகு, கரையொதுங்கிய திமிங்கலங்களின் உடலில் வாயுக்கள் உருவாகுவதால் அது மிகவும் வீங்கியது. சில நேரங்களில் அந்த வீக்கம் மிகவும் அதிகரித்து, உடல் வெடிக்கும் நிலையும் ஏற்படலாம். அதிகாரிகள் கரையொதுங்கிய திமிங்கலம் டிம்மி என்பதை உறுதிப்படுத்தினர்.

பின்னர் அதன் மரணத்திற்கான சரியா காரணத்தை அறிய விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். டிம்மியின் உடற்கூறு ஆய்வு (Obduktion) ஆனி 4 ஆம் திகதி கடற்கரையிலேயே மேற்கொள்ளப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக, இந்த ஆய்வு எதிர்பார்த்த முடிவை வழங்கவில்லை. டிம்மி இறந்ததற்கான துல்லியமான காரணத்தை நிபுணர்களால் கண்டறிய முடியவில்லை. இருப்பினும், இந்த ஆய்வின் போது ஒரு முக்கியமான தகவல் தெரியவந்தது. இதுவரை அனைவரும் டிம்மி ஒரு ஆண் திமிங்கலம் என்று தகவல் தெரியவந்தது. இதுவரை அனைவரும் டிம்மி ஒரு ஆண் திமிங்கலம் என்று நினைத்திருந்தனர். ஆனால் உடற்கூறு ஆய்வில், டிம்மி உண்மையில் ஒரு பெண் திமிங்கலம் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

டிம்மியின் கதை சோகமாக முடிந்தாலும், அது பலரின் மனதை தொட்டது. கடல் உயிரினங்களை பாதுகாப்பதின் முக்கியத்துவத்தை அதனது கதை நமக்கு நினைவூட்டுகிறது. டிம்மி என்றும் பலரின் நினைவில் இருக்கும்!...

**செல்வி சாமினா சிவதாசன் - யேர்மனி**



# IPhone ஆல் உலகில் குறையும் பிறப்பு வீகிதம்...

## சில மனிதகுலத்தை சிதைக்கும் ஐபோன் பாவனை் உலகில் குறையும் பிறப்பு விகிதம் ஆய்வில் அதிர்ச்சித் தகவல்..

உலகளவில் பிறப்பு விகிதம் குறைந்து வருவதற்கு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வது மட்டுமே காரணம் என்று கருதப்பட்ட நிலைய-ில், தற்பொழுது ஐபோ ன் மற்றும் நவீன ஸ்மார்ட்போன்களின் வருகையே இதற்கு முக்கியக் காரணம் என இரண்டு புதிய ஆய்வுகள் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் அமெரிக்காவின் தேசிய பொருளாதார ஆராய்ச்சி நி-றுவனம் நடத்திய ஆய்வில், 2007 முதல் 2011 வரையிலான காலகட்டத்தில் ஐபோன் பயன்பாடு அதிகரித்த இடங்களில்தான் பிறப்பு விகிதம் கணிசமாக குறைந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

## இணையதளங்களில் ஆபாச படங்களை பார்க்கும் பழக்கம்

ஸ்மார்ட்போன்களின் வரவால் இளைஞர்கள் நேரில் சந்தித்து பேசுவது 44 சதவீதம் குறைந்துள்ளதோடு, அவர்களின் பாலியல் செயல்பாடுகளும் குறைந்துள்ளன. அதற்கு மாற்றாக இணையதளங்களில் ஆபாச படங்களை பார்க்கும் பழக்கம் இரட்டிப்பாகியுள்ளது. அதோடு ,தேவையற்ற கர்ப்பத்தைத் தவிர்ப்பதற்கான விழிப்புணர்வும், கருத்தடை முறைகள் பற்றிய தகவல்களும் ஸ்மார்ட்போன்கள் மூலம் எளிதாக கிடைத்ததும் மற்றொரு காரணமாகக் கூறப்படுகிறது.

## 128 நாடுகளில் ஆய்வு

யுனிவர்சிட்டி ஆ.ஃப் சின்சினாட்டி பொருளாதார வல்லுநர்கள் 128 நாடுகளில் நடத்திய மற்றொரு ஆய்விலும், கலாச்சாரம் மற்றும் பொருளா-தார நிலைகள் வேறுபட்டிருந்தாலும், ஸ்மார்ட்போன் பயன்பாடு அதிகரித்த அனைத்து நாடுகளிலும் ஒரே காலகட்டத்தில் பிறப்பு விகிதம் வேகமாக சரிந்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.



# ஐரோப்பாவில் சுட்டெரித்த வெப்ப அலை...
## கடந்த மாதம் மட்டும் பிரான்ஸில் 2025 பேர் உயிரிழப்பு

வாட்டி வதைத்த கடுமையான வெப்ப அலை காரணமாக பிரான்சில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 2025 பேர் உயிரிழந்துள்ளனர். பிரான்சில் நிலவிவரும் கடுமையான வெப்ப அலை காரணமாக ஜூன் 22ம் திகதி முதல் 28ம் திகதி வரை மட்டும் கிட்டத்தட்ட 2025 பேர் உயிரிழந்து இருப்பதாக அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் கிட்டத்தட்ட 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று அத்துறையின் அமைச்சர் ஸ்டெ.ஃபானி ரிஸ்ட் தகவல் தெரிவித்துள்ளார். இந்த எண்ணிக்கையானது இறப்பு சான்றிதழ்களை வைத்து மட்டும் கணக்கில் எடுக்கப்பட்டு இருப்பதால், உயிரிழப்புகள் எண்ணிக்கை இதை விடவும் அதிகமாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பாரிஸ் நகரில் மட்டும் கிட்டத்தட்ட உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 62% உயர்ந்துள்ளது. வெப்ப அலை காரணமாக பிரான்ஸ், நெதர்லாந்து, ஸ்பெயின், இத்தாலி, யோமுனி, பிரித்தானியா மற்றும் பெல்ஜியம் ஆகிய ஐரோப்பிய நாடுகளில் ஜூன் மாத இறுதியில் மட்டும் மொத்தமாக 3,700 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 1000 பேர்வரை 85 வயது உடையவர்கள் மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜூன் கடைசி வாரத்தில் பதிவான வெப்பம் ஐரோப்பிய வரலாற்றிலேயே இதுவரை மிகவும் மோசமாக பதிவான வெப்பம் ஆகும்.அதிகமான வெப்பம் காரணமாக மின் உற்பத்தி பாதிப்பு மற்றும் சுகாதார அமைப்புகளில் சீர்குலைவு ஆகியவை ஏற்பட்டு இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்கிறன்.. இனிகோடை காலத்தில்பலபேர் தாய் நாட்டுக்குப் போகப் பல ஆயத்தங்களையும் செய்வீர்களென நினைக்கிறன். சிலர் இப்போதும் போய்க் கொண்டுதான் இருப்பியள் என எண்ணுகின்றான்

ஊருக்குச் சென்று அங்கு பந்தா காட்டி, தண்ணியடித்து கூழும் கும்மாளமும் அடிக்கலாமென்றும் தமது பிள்ளைகளுக்குச் சாமத்தியச் சடங்கு கலியாணம் என தமது சாதி, சமயம் பார்த்துச் செய்து வைப்பதும்,10.20.30, 40, 50, 60, 70, 80 எனப்பிறந்தநாள் கொண்டாட்டங்கள் களைகட்டிவிடும்தானே. கோவில் திருவிழாக்களும் வரிசையாகக் களைகட்டிவிடும்தானே.

நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு எப்ப ஓடலாம் என்று பல்லாயிரக் கணக்கானோர் படாத பாடுபடுகுதுகள் பாருங்கோ.. வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல் வெளிநாடுகளில் இருந்து வரும் பணங்களை நல்லாய் அனுபவிக்கும் கூட்டத்தினர் மிக அதிகம் பேர்.

சரி..சரி..இனி விசயத்துக்கு வாறன்... நம் சொந்த நாட்டில் நடை பெறும் செய்திகளால் காதும் வெடிக்குது. பொறுக்கவும் முடியாமல் கிடக்குது. பல..பல.. விபத்துகள், போதை மருந்துப் பாவனைகள், கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் எனப் பட்டியல் நீண்டு செல்கின்றதுதான் கவலை இந்த மயிலனுக்கு.

நாட்டில நடக்கிற சங்கதிகளைப் பார்த்தால் தலைசுத்தும். பணம், காணி, கடத்தல், போதைக்குக் காசு, போதை விற்பனை அது இது என்று கட்டுக்கடங்காத கொள்ளைகளும் கொலைகளும் கூடிவிட்டன. அதுவும் சொந்தங்கள் குடும்பங்களிலும் பெரிய குளறுபடிகள் தான். தாய், தகப்பனை ஏமாற்றும் பிள்ளைகள், சகோதரங்களுக்கிடையே ஏமாற்றும் கதைகள், ஊர் ஊறவு களிடம் சுத்துமாத்தும் அபகரிப்பும் கொள்ளையும், சொத்துக் குவிப்பும் அமளியாகத்தான் நடக்குது பாருங்கோ..

இந்தமுறை மயிலன் ஒரு விடயத்தை உங்களோடு பேசப்போறன் கண்டியளே..இதையும் கொஞ்சம் வாசித்துப்பாருங்கோ..என்னண்டாப் பாருங்கோ இந்த வெளிநாட்டுக் காசுகள் செய்கிற வேலையைப் பார்த்தால் எங்கபோய் தலையை முட்டுறதெண்டு தெரியலை பாருங்கோ..

ஒரு கோடிக்கு கார் வேண்டிக் கொடுத்த பிள்ளைகள், 1 கோடி செலவளித்து தனது பிள்ளைக்குச் சாமத்திச் சடங்கு செய்த அப்பன், கோயில் மேளக்காரருக்குப் 15-20 லட்சம் கொடுத்து மேளமடித்த அரைகுறைப் பணக்காரன், ஒரு லடசம் கொடுத்து ஒரு மாம்பழம் வேண்டிய பக்தன் இப்படியானவர்களின் உண்மைச் சம்பவங்கள் இந்த மயிலனின் காதுக்கு எட்டியது பாருங்கோ அதை உங்களோடு பகிர்ந்து கொள்ளப் போறன் கொஞ்சம் வாசித்துப்பாருங்கோவன் ராசாக்கள் ராசாத்திகள்..

இது அன்புச் சகோதரிகளின் கதை அல்ல நிஜம்பாருங்கோ.. தங்கை வெளிநாட்டில் இருபது வருடங்களுக்கு மேலாக அடியான் அடித்து இரவு பகலாக, பனி குளிர் எனப்பார்க்காமல் உழைத்து ஊரிலுள்ள அக்காவுக்கு தனக்கு ஒரு காணி வேண்டச் சொல்லி பெருந்தொகைப் பணத்தைப் பல வருடங்களாக அனுப்பியிருக்கிறா.

அக்கா சும்மா லேசுப்பட்டவாவா.. தங்கை அனுப்பிய காசில் தனக்கும் காணி வேண்டி தங்கைக்கும் காணிவேண்டி கள்ளக்கணக்குப்போட்டு அலுவலை முடித்திருக்கிறா.. வலு கில்லாடிதான் அக்கா. அதுவும் தங்கைக்குத் தெரிந்துவிடும் என வேறு வேறு இடங்களில் காணிவேண்டியிருக்கிறா பாருங்கோ. தங்கை வெளிநாட்டிலிருந்து தொலைபேசியில் கதைக்கும் போதெல்லாம் உருகி வழிந்து பாசத்தைக் கொட்டி தங்கையை மருட்டி இந்தப் பகல் கொள்ளையைச் செய்து முடித்திருக்கிறா அக்கா.

வெளிநாட்டிலுள்ள பாசத்தங்கை தனது மகளுக்கு சாமத்தியச்சடங்கு செய்வததோடு அந்தக் காணியைப் பார்த்துவரலாம் என்று நாட்டுக்குப் போனவா..அங்குதான் ஊரவர்களால் விசயம் வெளிச்சத்துக்கு வந்தது. மகளின் சாமத்தியச்சடங்கு முடியட்டும் பிறகு கதைப்பம் என்று யோசித்து. மகளின் சாமத்திய கொண்டாட்டத்தை ஒரு கோடி பணம் செலவழித்து புகழுக்காகச் செய்துமுடித்தா. ஊரெல்லாம் வாயில விரலவைத்த கதைதான்.

கொண்டாட்டம் நடந்த அடுத்தநாள் காலை பார்த்தால் வெளிநாட்டுத்தங்கை ஒப்பாரி வைத்துக் குளறி அழுது ஊரையே கூப்பிட்டுவிட்டா..விஷயம் என்னென்று ஊரே அலறி அடித்துத் திரள.. தங்கையினதும் பிள்ளையினதும் அத்தனை நகைகளும் திருடப்பட்ட சங்கதி வெளிவந்தது.அக்காவும் நீலிக்கண்ணீர் வடித்து தங்கைக்கு ஆறுதல் கூறிச் சமாளிக்க முற்பட.. சிறிது..சிறிதாக அக்காவும் இந்தக் களவில் பங்கு என அறியவந்தது.

அக்கா திட்மிட்டு செட்பண்ணி ஆட்களை வைத்து இந்தத் திருட்டு வேலையை கர்ச்சிதமாக முடித்திருக்கிறார். மகா கில்லாடிதான் அக்கா. தங்கையும் அக்காவும் குடுமிச்சண்டைபிடித்து, பொலிஸ்வரை சென்றுவிட்டது. தங்கையும் கணவரும் பிள்ளையும கோவில்கள் சாத்திரிகளை நம்பிக்கை வைத்து எந்தப் பலனும் கிடைக்காததால் வீட்டைவிட்டு வெளியெறி இருவாரம் ஹொட்டலில் தங்கி இந்தக் களவைக்கண்டுபிடிக்கலாம் என்று படாதபாடு பட்டிருக்கிறார்கள். இறுதியில் ஒருசத பலனும் இல்லாமல் உன்ர உறவும் வேண்டாம் நீ செத்தாலும் நான் வரமாட்டேன் என்று அழுது புலம்பி வெளிநாட்டுக்கு மீண்டும் வந்து இரவு-பகலாக அடியான் அடிக்கவேண்டியாயிற்று பாருங்கோ..

கூடிப்பிறந்த சகோதரியே இப்படி அநியாயம் செய்தால் மற்றவர்கள் எப்படி?.. யோசித்துப் பாருங்கள் யாரையும் நம்பக்கூடாது. அதுவும் பணம் பொருள் ஆசையால் மற்றவர்களை ஏமாற்றிச் சுருட்டி வாழ்ந்து சுகம்காணும் உடன்பிறப்புகளும் இப்படியா?..இதுதான் இன்று உலகப் போக்கு பாருங்கோ..

மயிலனுக்கு இக்கதையை அறிந்து வேதனைதான் ”பணம் பாதாளம்வரை பாயும்” என்பதும் பணத்துக்குப்பின்தான் எல்லாம் என்பதும் உண்மை பாருங்கோ...
(அடுத்த இதழில் வருவேன்)...

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| வெ | ப் | ப | ம் |
| ற் | டி | ண் | க |
| றி | நெ | ல் | ந |
| ப | சு | கா | ரி |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சி | றை | ச் | சா | லை | ல் | மு |
| ங் | ர் | ணீ | ண் | க | ண் | டி |
| க | ன் | பா | ப் | ய | க | வு |
| ள | ம் | ன | ச | ஆ | சை | க |
| வ | ள் | ளு | வ | ர் | இ | ற் |
| ர் | க | லை | ட் | யி | றை | சி |
| க | ண் | ணா | டி | ப | ப | லை |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 4 | 5 | 2 | 1 | 7 | 8 | 6 |
| 5 | 1 | 8 | 4 | 7 | 6 | 2 | 9 | 3 |
| 2 | 7 | 6 | 3 | 8 | 9 | 5 | 1 | 4 |
| 8 | 5 | 1 | 9 | 6 | 2 | 4 | 3 | 7 |
| 6 | 3 | 9 | 7 | 4 | 5 | 8 | 2 | 1 |
| 4 | 2 | 7 | 8 | 1 | 3 | 6 | 5 | 9 |
| 1 | 4 | 5 | 2 | 9 | 7 | 3 | 6 | 8 |
| 9 | 8 | 3 | 6 | 5 | 4 | 1 | 7 | 2 |
| 7 | 6 | 2 | 1 | 3 | 8 | 9 | 4 | 5 |





# பொதுப்பணியில் 42 வருடங்கள்....

## -பொதுப்பணிக்கு 42 வருடங்கள் வாழ்வை அர்ப்பணித்தவருக்கு பிறந்தநாள்..கொண்டாடினார்....(19.5.2026)
## -நிர்வாக இயக்குநர் செல்வி விமலகுமாரி நடராசா - ஸ்ரீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
## -தெல்லிப்பளை தங்கம்மா அப்பாகுட்டியைப்போல் திருகோணமலைக்குச் செல்வி..விமலகுமாரி நடராசா..

இவரின் தந்தை தென்மராட்சி - மட்டுவிலைச் சேர்ந்த ஆசிரியர் நடராசா தாய் வடமராட்சி புலோலியைச் சேர்ந்தவர். இத்தம்பதிகளுக்கு 6 பிள்ளைகள். இவர்களில் கடைக்குட்டியாகப் பிறந்தவர்தான் விமலகுமாரி 19.05.1944ம் ஆண்டு பிறந்தார். இன்று இவருக்கு 82வது பிறந்தநாளாகும். நூறாண்டுகள் கடந்து நோய்நொடி இல்லாமல் சிறப்பாக வாழவேண்டி, பிறந்தநாள் வாழ்த்துகளை ”மண்” சஞ்சிகையின் வாசகர்கள் சார்பில் வாழ்த்தி நிற்கின்றோம்.

விமலகுமாரி தனது ஆரம்பக் கல்வியை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கற்றதோடு உயர்தர கல்வியை யாழ்-இராமநாதன் கல்லூரியில் பயின்றார். இந்தியாவில் சென்னை பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினை மேற்கொண்டு இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் கற்கையினை நிறைவு செய்து விஞ்ஞான பட்டதாரியாக வெளியேறினார். இந்தியாவில் இருக்கும் போது 1971 ஆம் ஆண்டு காலப்பகு தியில் பகவான் ஸ்ரீசத்யசாய் பாபாவின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அவர் போதனைகளை தனது வாழ்வில் கடைப்பிடிக்க தொடங்கினார்.

இவர் யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி கரவெட்டி பகுதியில் உதவி அரசாங்க அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகத் தனது அரச பணியை 1975ம் ஆண்டு மேற்கொண்டார். இடம்மாற்றம் காரணமாக 1977 ஆம் ஆண்டு கோணேசர் பூமி எனப்படும் திருகோணமலை மண்ணில்

கால் பதித்தார். திருகோணமலை மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் உத்தியோகத்தராக பணியாற்றினார்.

இதன் காலப்பகுதியில் ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தின் விடுதியில் தங்கியிருந்த போது அங்கிருந்த மாணவர்களுக்கு தனது ஓய்வுநேரங்களில் பாடங்களை கற்பித்து கொடுத்தார். இதன் போதே அதிபர் ஆசிரியர்களுடனும் இன்னும் பல சேவை நிறைந்த நல்லுள்ளங்களுடனும் நட்பு உறவினை வளர்த்துக் கொண்டார். இருபது வருடங்களாக அரச ஊழியராக பணியாற்றி தனது 46 ஆவது வயதில் ஓய்வு பெற்றுக் கொண்டார்.

ஸ்ரீசண்முக தர்மஸ்தாபன சபையினால் 1984 ஆம் ஆண்டு சண்முக தர்மஸ்தாபன நம்பிக்கை நிதி பொறுப்பாளாராக செல்வி விமலகுமாரி நடராஜா நியமிக்கப்பட்டார். செல்வி. திலகவதியின் பின் இரு இல்லங்களின் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு முகாமையாளராக கடமையாற்றினர். இதன் போது 65 பெண்பிள்ளைகளையும் 32 ஆண் பிள்ளைகளையும் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் பராமரித்து வந்தார். ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்க செயலாளராக பொறுப்பேற்று பாட-சாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும் தனது அயராத சேவையை வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமா-கும்.

”மக்கள் சேவையை மகேசன் சேவை” என்பதனை மனதில் நிறுத்தி திருமண வாழ்விற்குச் செல்லாமல் தன்னை அர்ப்பணித்து சேவைக்காக தனது உடலையும் உள்ளத்தையும் அர்பணம் செய்து ஆன்மிக வழியில் இறைவ-னது துணையோடு தைரியமாகவும் நுண்ணறிவாகவும் செயற்பட்டு இன்றுவரை சலிப்பின்றி 42 வருடங்களாக இல்லத்தினையும் இல்லப்பிள்ளைகளையும் பராமரித்து வருகிறார். தற்போது பதினேழு பிள்ளைகள் இல்லத்தில் தங்கி இருக்கின்றனர். இவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், உடல் ஆரோக்கியத்திற்காகவும் தன்னால் முடியுமான வரை சகல விதமான உதவ-ிகளையும் சலிப்பின்றி செய்து வருகின்றார். இவ் இல்லத்தில் தங்கி கல்வி கற்றவர்களில் பலர் ஒரே தடவையில் கல்வி பொதுத்தர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்பதற்கான தகுதியை பெறுகின்றனர்.

அதிலும் சிலர் பட்டப்படிப்பை நிறைவு செய்து ஆசிரியர்களாகவும் தாதியர்களாகவும் அரச பணியாளர்களாகவும் உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் கடமை புரிகின்றனர். இதற்கெல்லாம் செல்வி. விமலகுமாரி யின் வழிகாட்டல்களும் அறிவுரைகளும் பராமரிப்பு முறைகளும் காரண-மாக இருக்கின்றன. பிள்ளைகளை தவறான வழியில் செல்லவிடாமல் தனது பார்வையின் கீழ் வாழ்விற்கு தகுந்த அறிவுரைகள் வழங்கி பகவான் பாபாவி ன் கொள்கைகளை போதித்து வருகிறார்.

ஜெர்மனியில் மண்சஞ்சிகை பிரதம ஆசிரியர், லண்டனில் இல்லத்தின் ஸ்தாபகரின் மகன், மற்றும் நண்பர்கள், உறவினர்கள், நலன்விரும்பிகள்

போன்றவர்களிடம் தொடர்ச்சியான நிதி உதவிகளோடு, ஸ்ரீ சண்முக தர்ம ஸ்தாபனத்திற்கு உரிய காணிகளை விற்று நீதிமன்றத்தில் வைப்பு செய்தும் தேவையான நேரங்களில் நிதி உதவிகள் பெற்றும் பிள்ளைகளை ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், ஒழுக்க சீலர்களாகவும் பராமரித்து வருகின்றார்.

ஸ்ரீ சண்முக தர்மஸ்தாபனத்தின் செயலாளராகவும் இல்லத்தின் பொறுப்பாளராகவும் தனது சேவையை தொடர்ந்து வருகின்றார். தனது உடல் ஆரோக்கியத்தினை கருத்திற்கொண்டு ஓய்வுபெற நினைத்தாலும் தனது இறுதி மூச்சு வரை சேவைக்காகவே தன்னை அர்பணித்துள்ளார். இத்தகைய சேவை நல்லுள்ளம் நிறைந்தவர் தேக ஆரோக்கியத்தோடு வாழ இறைவன் ஆசீர்வதிப்பாராக.. "தன் வாழ்வினை விட பிறர் வாழ்வினை உயர்த்த நினைத்தவர்களே காலத்தால் மறக்க முடியாதவர்கள்." அந்தவகையில் பல நூற்றுக்கணக்கான ஆதரவற்ற மற்றும் வறிய பிள்ளைகளின் வாழ்வில் ஒளியேற்றி வைத்த செல்வி.விமலகுமாரி அவர்கள் போற்றுதலுக்கும் பாராட்டுக்குரியவருமாவர்.

பொது வாழ்வுக்கு மெழுகுதிரிபோல தன்னையே அர்ப்பணித்து கடந்த 42 ஆண்டுகள் பொதுப்பணி, கல்விப்பணி, சமயப்பணி என ஆற்றிவரும் செல்வி விமலகுமாரி நடராசா அவர்களின் பிறந்தநாளில் தமிழுலம் போற்றட்டும் வாழ்த்தட்டும்!..அம்மாவுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்!..

**ஆசிரியர் - மண் சஞ்சிகை - யோ்மனி**

.................................................................................................................................

## நண்பர்களை மறந்து விடாதீர்கள்!..

- 60 வயது முதியவர் தனியாக இருந்தால் 60 வயது முதியவர் போல இருப்பார்.
- 60 வயதுடைய இரண்டு பேர் சந்தித்தால் 30 வயதுடையவர்கள் போல் இருப்பார்கள்
- 60 வயதுடைய மூன்று பேர் ஒன்று சேர்ந்தால் 20 வயது இளையவர்கள் போல இருப்பார்கள்
- 60 வயதுடைய ஆறு பேர் ஒன்று சேர்ந்தால் அவர்கள் பள்ளி செல்லும் குழந்தைகள் போல இருப்பார்கள்.

அதனால்தான் ஒவ்வொருவரும் தங்கள் நண்பர்களை மறக்காமல் தொடர்ந்து சந்தித்து வந்தால் முதுமையின் அறிகுறிகள் மறைந்து போகும்...

# சுகாதாரக் குறிப்புகள்...

**மொழிபெயர்ப்பு......**

**செல்வி சாமினா சிவதாசன்**
Essen - Germany




## மருத்துவக் குறப்புகள் மொழிபெயர்ப்பு

1- புற்றுநோய் "Gesundheit" என்னும் அரச சுகாதார காப்பீடு ஒவ்வொரு ஆண்டும் மக்கள் எந்த நோய்க்கு அதிகமாக பயப்படுகின்றார்கள் என்பதைப் பற்றி ஒரு கருத்தாய்வு நடத்துகின்றது. அதுபோல 2025 ஆம் ஆண்டிலும் 14 வயதிற்கு மேற்பட்ட 1000 பேர் கேள்வி கேட்கப்பட்டனர். இந்த கருத்தாய்வில் பின்வரும் முடிவுகள் கிடைத்தன.
புற்றுநோய் 73%
அல்ஸைமர் / மறதி நோய் 55%
பக்கவாதம் 52%
கடுமையான காயங்களுடன் ஏற்பட்ட விபத்து 50%
மாரடைப்பு 42%
கடுமையான கண் நோய்கள் 41%
மனநல நோய்கள் 36%
கடுமையான நுரையீரல் நோய்கள் 27%
நீரிழிவுநோய் 21%
பாலியல் தொடர்பான நோய்கள் 11%

2- 2025 ஆம் ஆண்டில் ஜேர்மனியர்களின் பயண இலக்குகள் குறித்து „Statista" ஒரு கருத்தாய்வு நடத்தியது. அதன் முடிவுகள் பின்வருமாறு உள்ளன.
ஜேர்மனி 29%
ஸ்பெயின் 8,1%
இத்தாலி 5,9%
துருக்கி 4,5%
ஸ்காண்டினேவியா 4,3%
கிரீஸ் 3,6%
ஆஸ்திரியா 2,1%
பிரான்ஸ் 2%
குரோஷியா 1,3%
ஐரோப்பா 39%
தொலைதூர பயணம் 11,4%
இன்னும் முடிவு செய்யப்படவில்லை 14,5%

3- 2025 ஆனி 2 முதல் 4 வரை „YouGov“ நிறுவனம் 1964 பேரிடம் அவர்கள் கீழ்க்கண்ட எந்த அலர்ஜிகளை கொண்டுள்ளனர் என்று கருத்துக்கணிப்பு நடாத்தியது. பதில்கள் ஆண்கள் மற்றும்பெண்கள் என தனித்தனியாக பிரிக்கப்பட்டனர்.

| அலர்ஜிகள்... | பெண்கள். | ஆண்கள் |
|---|---|---|
| மலர்த்தூள் அலர்ஜி. | 27%. | 23% |
| தூசி அலர்ஜி. | 14%. | 9% |
| உணவு அலர்ஜி. | 14% | 9% |
| மருந்து அலர்ஜி. | 15%. | 5% |
| விலங்குகளின் முடி அலர்ஜி. | 10%. | 7% |
| பூச்சி கடி அலர்ஜி. | 9% | 5% |
| பூஞ்சனம் அலர்ஜி. | 5%. | 3% |
| சூரியன் அலர்ஜி. | 8%. | 2% |
| இரசாயன அலர்ஜி. | 5%. | 3% |
| லேடெக்ஸ் அலர்ஜி. | 4%. | 1% |
| மற்றவை. | 7%. | 3% |
| எனக்கு எந்தஅலர்ஜியும்இல்லை. | 42%. | 52% |
| தெரியவில்லை. | 3%. | 3% |

4- உலகின் மிகவும் பழமையான, புகழ்பெற்ற மற்றும் செல்வாக்கு வாய்ந்த மருத்துவ அறிவியல் இதழ்களில் ஒன்றான „The Lancet“ இதழில், 2025 ஆம் ஆண்டு நிபுணர்கள் அல்ஸைமர் நோயை அதிகரிக்கச் செய்யும் 14 காரணங்களை வெளியிட்டனர். இக்காரணங்கள் மொத்த அபாயத்தின் 45%ஐ நிர்ணயிக்கின்றன.

1- புகைப்பிடித்தல்
2- உடல் செயல்பாட்டின்மை
3- மதுபானம் அருந்துதல்
4- அதிக உடல் எடை
5- காற்று மாசுபாடு
6- சர்க்கரை நோய்
7- அதிக LDL கொலஸ்ட்ரோல்
8- உயர் இரத்த அழுத்தம்
9- மனஅழுத்த நோய்
10- பார்வைக் குறைபாடு
11- கேள்வித் திறன் குறைபாடு
12- சமூக தனிமை
13- குறைந்த கல்வி நிலை
14- மூளை காயங்கள்

5- „ my life Senioren“ என்னும் வயோதிபர்களுக்கு உரிய இதழில் மூளைக்கான சிறந்த 10 உணவுகள் வெளியிடப்பட்டது. அதில் பின்வருவன மூளை ஆரோக்கியத்திற்கு நல்ல உணவுகள் எனக்குறிப்பிடப்பட்டன: அவ-காடோ, ப்ரோக்கோலி, பேரிக்காய் வகைகள், முட்டை, பருப்பு வகைகள், கொட்டைகள், காப்பி, மஞ்சள், சால்மன் மீன் மற்றும் தாவர எண்ணெய்கள்.

6- ”Gut leben mit Diabetes“ என்ற இதழில், 2024 ஆம் ஆண்டு, நீரிழிவு நோ யால் உடலின் எந்த பகுதிகளில் தொடர்ச்சியான நோய்கள் உருவா- கலாம் என்பது வெளியிடப்பட்டது. இது உடலின் பின்வரும் பகுதிகளை பாதிக்கக்கூடும்:

கண்கள், நுரையீரல், கல்லீரல், (புற்றுநோய்), நரம்புகள், கால்ப்பாதங்கள், தோல், பாலியல் உறுப்புகள், சிறுநீரகங்கள், இதயம் மற்றும் இரத்த ஓட்டஅமைப்பு, பற்கள், மூளை மற்றும் மனநிலை.

7- பிரிட்டனின் „Sheffield Teaching Hospital“ மருத்துவர்களின் ஆய்வின்படி, அறுவைச் சிகிச்சைக் குழுவினர் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்திருப்பின், அது நோயாளிகளுக்கு அதிக நன்மை அளிக்கிறது. நோயாளிகள் குறைந்த அறுவைச் சிகிச்சை நேரம், குறைந்த மருத்துவமனை தங்கும் காலம் மற்றும் குறைவான மீண்டும் அனுமதிப்புகள் போன்ற நன்மைகளை பெறுகின்றனர்.

....................  ......................



## நீரிழிவு நோயாளிகள் எந்தெந்த உணவை சாப்பிட கூடாது?....

உங்களுக்கு உடலில் நீரிழிவு நோய் இருந்தால் அதற்கு நீங்கள் என்ன உணவை சாப்பிட கூடாது என்பது பற்றி யாருக்காவது தெரியுமா? பதிவில் அதை விரிவாகப் பார்க்கலாம்.

### நீரிழிவு நோய்..

உலகில் மிக அதிகமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு காரணம் அவர்களுடைய முறையற்ற வாழ்க்கை முறை மற்றும் தவறான உணவுப்பழக்க வழக்கம்.நீரிழிவு நோய்க்கு சர்க்கரை மட்டும் தான் சாப்பிட கூடாது என அனைவரும் நினைப்பார்கள். ஆனால் அதை மட்டும் நிறுத்தினால் நீரிழிவு நோய் கட்டுக்குள் இருக்காது அதற்குச்

சில உணவு முறைகளையும் நாம் கடைபிடிக்க வேண்டும். இந்தப் பதிவில் நீரிழிவு நோயாழிகள் எந்த உணவுகளைச் சாப்பிடக்கூடாது என்பதை பார்க்கலாம்.

## வறுத்த மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள்...

இனிப்புகள் மற்றும் சர்க்கரையைத் தவிர, வறுத்த மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் நீரிழிவு நோயாளிகளின் ஆரோக்கியத்திற்கு கடுமையாக தீங்கு விளைவிக்கும்.இதன் பொருள் நீங்கள் சிப்ஸ் மற்றும் சிற்றுண்டிகளைத் தவிர்க்க வேண்டும். மேலும், சமோசாக்கள், பீட்சா மற்றும் பர்கர்கள் போன்ற துரித உணவுகளை உங்கள் உணவில் இருந்து நீக்குவது புத்திசாலித்தனம்.

நீரிழிவு நோயைப் பொருட்படுத்தாமல், வறுத்த மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் உங்கள் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்று சுகாதார நிபுணர்கள் கூறுகிறார்கள்.

## எந்த பழங்களைத் தவிர்க்க வேண்டும்?

நீரிழிவு நோயாளிகள் குறிப்பிட்ட சில பழங்களை சாப்பிட கூடாது. அதன்படி நீரிழிவு நோய் இருப்பவர்கள் மாம்பழம், வாழைப்பழம், சப்போட்டா, லிச்சி மற்றும் திராட்சை போன்ற பழங்களை சாப்பிட கூடாது. காரணம் இந்த பழங்களில் அதிகமான கிளைசெமிக் உள்ளது எனப்படுகின்றது.

இது தவிர பால், வெண்ணெய், சீஸ் மற்றும் டால்டா போன்ற நிறைவுற்ற கொழுப்பு நிறைந்த உணவுகளும் நீரிழிவு நோயாளிகள் சாப்பிட கூடாது. இது அவர்களின் ஆரோக்கியத்தில் மோசமான விளைவை ஏற்படுத்தும்.

அனறாட உணவில் வெள்ளை அரிசி, சுத்திகரிக்கப்பட்ட மாவு, வெள்ளை ரொட்டி மற்றும் பாஸ்தா போன்ற உணவுகளை சேர்த்து கொள்ளாதீர்கள். இந்த உணவுகள் நீரிழிவு நோயாளிகளின் ஆரோக்கியத்திற்கு கடுமையாக தீங்கு விளைவிக்கும்.

இது தவிர இனிப்பு தேநீர் அல்லது இனிப்பு காபி போன்றவற்றை குடிக்க கூடாது. இதற்கு பதிலாக நீங்கள் பிளாக் காபியை எடுத்து கொள்ளலாம். மேலும் உருளைக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு மற்றும் கிழங்கு ஆகியவற்றை சாப்பிடுவதை குறைக்க வேண்டும். சுகாதார நிபுணர்களின் கூற்றுப்படி, இந்த உணவுகள் இரத்த சர்க்கரையை விரைவாக அதிகரிக்கும் எனப்படுகின்றது. ..........................................................................................................

## செய்தி:-

1- புகையிலைப் பாவனையால் ஆண்டுதோறும் உலகில் சுமார் 8 கோடிபேர் மரணிக்கிறார்கள்.

2- தற்போது உலகில் சுமார் 120 கோடி மக்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள் என உலக சுகாதார நிறிவனம் அறிவித்தது.

# புற்றுநோயிலிருந்து உடலை பாதுகாக்க உதவும் 5 உணவுகள்.., என்னென்ன தெரியுமா?

புற்றுநோய் என்றாலே, அனைவருக்கும் அபாயகரமான விளைவுடன் கூடிய ஒரு ஆபத்தான நோய்தான் நினைவுக்கு வரும்.

உண்மையில், பெரும்பாலான புற்றுநோய்கள் அதிகமாக வளர்ச்சியடைவதற்கு முன்பே கண்டறியப்பட்டால், சிகிச்சையளிக்கப்படக்கூடியவை.அந்தவகையில், புற்றுநோயை தடுக்க உதவும் 5 உணவுகள் என்னென்ன என்பது குறித்து பார்க்கலாம்.

### 1. சக்கரைவள்ளிகிழங்கு:-

இந்த கிழங்கில் நீர்ச்சத்து, கார்போஹைட்ரேட்டுகள், புரதச்சத்து, நார்ச்சத்து, மினரல்கள் மற்றும் வைட்டமின்கள், பொட்டாசியம், மாங்கனீஸ் போன்ற ஏராளமான சத்துக்கள் உள்ளன.இதில் உள்ள கெரட்டினாய்டுகள் வயிறு, சி-றுநீரகம் மற்றும் மார்பக புற்றுநோய் குறைப்பதற்கு பெருமளவு உதவுகிறது.

### 2. ப்ரோக்கோலி...

இதில் உள்ள சல்பரோபேன் என்ற வேதிப்பொருள் புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைத் தடுப்பதோடு, கட்டிகளுக்குச் செல்லும் ரத்த ஓட்டத்தையும் தடை செய்ய உதவுகிறது.மார்பகப் புற்றுநோய், குடல் புற்றுநோய் மற்றும் புரோஸ்டேட் புற்றுநோய் அபாயத்தைக் குறைக்க இது உதவுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### 3. கிவி

இதில் உள்ள வைட்டமின் சி, நார்ச்சத்து, பாலி.ஃ.பெனால்ஸ் உடலில் திசுக்கள் சேதமாவது தடுக்கப்படுகிறது.இதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் மற்றும் வைட்டமின்கள் புற்றுநோய் தடுப்பில் இது மிகவும் உதவியாக இருக்கும்.

### 4. க்ரீன் டீ

இதில் உள்ள எபிகல்லோகேடசின்-3-கேலேட் எனப்படும் சக்திவாய்ந்த ஆக்ஜினேற்றி புற்றுநோய் செல்கள் உருவாவதை தடுக்கவும், பரவுவதை யும் கட்டுப்படுத்துகிறது. மேலும் உடலிலுள்ள .ஃ.ப்ரீ ரேடிக்கல் நச்சுக்களை அழித்து, ஆரோக்கியமான செல்களின் டிஎன்ஏ சிதைவடையாமல் பாதுகாக்கிறது.

**5. பீன்ஸ்**:- புரதம், நார்ச்சத்து நிறைந்த பீன்ஸை அதிகமாக உட்கொண்டால் மார்பகப் புற்றுநோயின் அபாயம் 28% வரை குறையும்.ஏனெனில், அதிக நார்ச்சத்து உட்கொள்ளல் பெருங்குடல் புற்றுநோய் அபாயத்தைக் குறைக்க உதவும்.





# தமிழ்ச்சினிமாவில் தடம்பதித்தபாரதிராஜாமறைந்தார்...



# தமிழ்ச் சினிமாவில் தடம்பதித்த பாரதிராஜா மறைந்தார்...

**தனிப்பட்ட வாழ்க்கை..**பாரதிராஜா தேனி மாவட்டம் அல்லி நகரத்தில் பெரியமாயத்தேவர், கருத்தம்மாள் இணையருக்கு 17.07.1941ல் பிறந்தார். இவரின் இயற்பெயர் சின்னச்சாமி ஆகும். சந்திரலீலாவை மணந்த இவருக்கு மனோஜ் மற்றும் ஜனனி என்ற இரண்டு பிள்ளைகள்.தமிழ்த் திரைப்படங்களில் முதன்மையாகப் பணியாற்றிய இந்தியத் திரைப்பட இயக்குநரும், தயாரிப்பாளரும், திரைக்கதை ஆசிரியரும் நடிகருமாவார்.

1977-ஆம் ஆண்டில் “பதினாறு வயதினிலே“ திரைப்படத்தில் அறிமுகமான இவர், கிராமத்து வாழ்க்கையைத் தனது படங்களில் மிகவும் உண்மையாகவும் உணர்வுபூர்வமாகவும் காட்டியதற்காகப் புகழ்பெற்றவர். மக்கள் இவரை “இயக்குநர் இமயம்“ என்று அன்பாக அழைத்தனர். இவருடைய திரைப்படங்களில் கதைப்பாத்திரங்கள் அதிக ஒப்பனை இல்லாமல், எளிய மனிதர்களாகவே தோன்றினர்.



**வாழ்க்கைக் குறிப்பு...**தேனி-அல்லிநகரம் என்னும் ஊரைச் சேர்ந்த இவர் அரங்கத்திற்குள் எடுக்கப்பட்டு வந்த தமிழ்த் திரைப்படங்களை வெளிப்புறப் படப்பிடிப்புப் பகுதிகளுக்குக் கொண்டு சென்றவர் என்ற பெருமைக்குரியவர். பெரும்பாலும் உணர்வு நிறைந்த நாட்டுப்புறக் கதைகளைப் படம் பிடித்தவர். இசையமைப்பாளர் இளையராஜாவுடன் இணைந்து மறக்க இயலாத இனிய பாடல்களைத் தந்தவர். ராதிகா, ராதா, ரேவதி, ரேகா, ரஞ்சிதா போன்ற பல ”ரா” வரிசைக் கதாநாயகிகளை அறிமுகம் செய்தவர்இ

**திரை வாழ்க்கை...**இவரது முதற் தமிழ் படமான 16 வயதினி-லே திரைப்படத்தில் திரைக்கதை எழுதி இயக்கியிருந்தார். கிராமத்துத் திரைப்படம் என்ற புதிய வகையை உருவாக்க அப்போதைய நடைமுறை யில் இருந்த காட்சிகளை மாற்றியமைத்துஇவரது பாணியில் படமாக்கினார். பதினாறு வயதினிலே இப்போதும் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது. இவரது பல திரைப்படங்கள் சமூகத்தில் நிலவும் சாதியக் கொடுமைகள் மற்றும் மூடநம்பிக்கைகளைத் தைரியமாகச் சாடின. தமிழ்த் திரையுலகில் 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய இவர் 38 திரைப்படங்களை இயக்கினார். இயக்குநராக மட்டுமல்லாமல், 25-இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடிகராகவும் நடித்தார். இவர் தெலுங்கு, இந்தி மொழிப் படங்களையும் இயக்கினார்.



## திரை வாழ்க்கை...

இவரது முதற் தமிழ் படமான 16 வயதினிலே திரைப்படத்தில் திரைக்கதை எழுதி இயக்கியிருந்தார். கிராமத்துத் திரைப்படம் என்ற புதிய வகையை உருவாக்க அப்போதைய நடைமுறையில் இருந்த காட்சிகளை மாற்றியமைத்து இவரது பாணியில் படமாக்கினார். பதினாறு வயதினிலே இப்போதும் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

இவர் இயக்கிய அடுத்த திரைப்படம் கிழக்கே போகும் ரயில் முதற் திரைப்படம் போன்றே வெற்றியைத் தந்தது. இதன் மூலம், பாரதிராஜா கிராமப் பார்வையாளர்களுக்கு மட்டுமே திரைப்படம் எடுக்கும் திறன் கொண்டவர் என்ற விமர்சனங்களைப் பெற்றார். இது சிகப்பு ரோஜாக்கள் திரைப்படத்தை உருவாக்க வழிவகுத்தது. ஒரு மனநோயாளியான பெண் வெறுப்பாளரைப் பற்றிய இத்திரைப்படம் கருத்தாக்கம், தயாரிப்பு என முற்றிலுமாக மேற்கத்திய பாணியில் உருவாக்கப்பட்டது.

, அலைகள் ஓய்வதில்லை (1981), மண் வாசனை (1983), முதல் மரியாதை (1985) ஆகிய திரைப்படங்கள் ஒரு கிராமத்தின் பின்னணியில் வலுவான காதல் கதைகளாக இருந்தது. முதல் மரியாதை திரைப்படத்தில் சிவாஜி கணேசன் நடுத்தர வயது கிராமத் தலைவரான முக்கியக் கதாபாத்திரத்தில் நடித்தார். ராதா ஓர் ஏழை இளம் பெண், தனது கிராமத்திற்கு ஒரு வாழ்க்கைக்காக நகர்கிறார். இந்த இரண்டு மனிதர்களையும் வயது மட்டுமல்ல, சாதி மற்றும் வர்க்கத்தினாலும் பிரிக்கும் அன்பு, பாரதிராஜாவால் கவிதைகளால் கூறப்படுகிறது.

வேதம் புதிது திரைப்படத்தில் சாதிப் பிரச்சினையை வலுவான முறையில் கையாண்டார். படத்தின் கதையில் சத்தியராஜ் பாலு தேவராக நடித்தார். இதில் பாரதிராஜாவின் சில வர்த்தக முத்திரைகளும், சமுதாயத்தில் உள்ள பல உண்மைக் காட்சிகளும் உள்ளன.

**திரைப்படம்....**தயாரிக்கும் நுட்பங்களை வெற்றிகரமாக நவீனப்படுத்த முடிந்தது. வர்த்தக வெற்றிக்கு கிழக்குச் சீமையிலே, விருதுகளில் வெற்றி பெற்ற கருத்தம்மா ஆகியனவாகும். இளைய தலைமுறையினரையும் சிலிர்ப்பிக்கும் இவரது திறனுக்குச் சான்றாக நிலைப்பாட்டைப் பெற்றது. 1996 ஆம் ஆண்டில் அந்திமந்தாமரை படத்திற்காக மற்றொரு தேசிய விருதைப் பெற்ற பாரதிராஜா அதே புகழின் உச்சியில் இருந்தார் .

## விருதுகளும் கௌரவிப்பும்.. -

2004 - பத்மஸ்ரீ இந்திய அரசிடமிருந்து

## தேசியத் திரைப்பட விருதுகள்

- 1982-சிறந்த தெலுங்குத் திரைப்படத்திற்கான தேசியத் திரைப்பட விருது- சீதாகொகா சிலுகா(இயக்குநர்)

- 1986-சிறந்த தமிழ்த் திரைப்படத்திற்கான தேசியத் திரைப்பட விருது-முதல் மரியாதை (தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர்)

- 1988-பிற சமூகப் பிரச்சினைகள் குறித்த சிறந்த படத்திற்கான தேசியத் திரைப்பட விருது- வேதம் புதிது (இயக்குநர்)

- 1995-கருத்தம்மாவுக்கு (இயக்குநர்) குடும்ப நலன் குறித்த சிறந்த படத்திற்கான தேசியத் திரைப்பட விருது

- 1996-சிறந்த தமிழ்த் திரைப்படத்திற்கான தேசியத் திரைப்பட விருது- அந்திமந்தாரை (இயக்குநர்)

- 2001-சிறந்த திரைக்கதைக்கான தேசியத் திரைப்பட விருது- கடல் பூக்கள் (இயக்குநர் ரூ எழுத்து)

## பிலிம்பேர் விருதுகள்...

- 1978 சிறந்த தமிழ் இயக்குநர்- சிகப்பு ரோஜாக்கள்
- 1987 - சிறந்த தமிழ்த் திரைப்படம்- வேதம் புதிது
- 1987 - சிறந்த தமிழ் இயக்குநர்- வேதம் புதிது
- 1994 - சிறந்த தமிழ்த் திரைப்படம்- கருத்தம்மா

## தமிழ்நாடு மாநிலத் திரைப்பட விருதுகள்

- 1977 - சிறந்த இயக்குநர் விருது- 16 வயதினிலே
- 1979- சிறந்த படத்திற்கான தமிழ்நாடு மாநிலத் திரைப்பட விருது
 இரண்டாம் பரிசு -
 புதிய வார்ப்புகள் - 1981 - சிறந்த இயக்குநர் விருது- அலைகள் ஓய்வதில்லை
- 1994 - நல்ல வெளிச்சத்தில் பெண்ணைச் சித்தரிக்கும் சிறந்த படம்- கருத்தம்மா
- 2001 - தமிழ்நாடு மாநிலத் திரைப்படக் கௌரவ விருது - 2001-இல் அறிஞர் அண்ணா விருது
- 2003 - முதல் இடத்தில் சிறந்த படம்- ஈர நிலம் நந்தி விருதுகள்

-1981 - சிறந்த இயக்குநர் நந்தி விருது- சீதாகொகா சிலுகா

## விஜய் விருதுகள்..

- 2012 - தமிழ்த் திரைப்படப் பங்களிப்பு
- 2013 - சிறந்த துணை நடிகருக்கான பாண்டிய நாடு

## பிற விருதுகள்..

- 1980 - தென்னிந்தியத் திரைப்படத் தொழில்நுட்ப வல்லுநர்கள்: கல்லுக்குள் ஈரம் படத்திற்காக சிறந்த தொழில்நுட்ப விருது
- 2005 - சத்தியபாமா பல்கலைக்கழகத்தில் கௌரவ முனைவர் பட்டம்



# பாக்கியராஜா மறைந்தார். 07.01.1953 - 27.06.2026

தமிழ் திரைப்பட உலகின் முன்னணி இயக்குநர், நடிகர், திரைக்கதை ஆசிரியர் மற்றும் வசனகர்த்தாவாகப் புகழ்பெற்ற கே. பாக்யராஜ் (வயது 73) காலமானார். சென்னையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் உடல்நலக் குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில், திடீர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. அவரது மறைவு தமிழ் திரையுலகினரையும் ரசிகர்களையும் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

1953 ஜனவரி 7-ஆம் திகதி ஈரோடு மாவட்டம் வெள்ளகோவிலில் பிறந்த பாக்யராஜ், இயக்குநர் பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராக தனதுதிரைப்பயணத்தைத் தொடங்கினார். பின்னர் “சுவர் இல்லாத சித்திரங்கள்“ திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானார். “அந்த 7 நாட்கள்“, “முந்தானை முடிச்சு“, “இன்று போய் நாளை வா“, “சின்ன வீடு“, “டார்லிங் டார்லிங் டார்லிங்“ உள்ளிட்ட பல வெற்றித் திரைப்படங்களை இயக்கி நடித்த அவர், குடும்பக் கதைகள், நகைச்சுவை மற்றும் உணர்வுப்பூர்வமான திரைக்கதைகளால் தமிழ் சினிமாவில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தார்.

திரைக்கதையின் மன்னனாக உயர்ந்த பாக்யராஜா முழுப்பெயர் கிருஷ்ணசாமி மனைவி - பூர்ணிமா, பிள்ளைகள் மகன் - சந்தனு, மகள் - சரண்யா திரைத்துறை அறிமுகம் 1977 (உதவி இயக்குநர்) இயக்குநராக அறிமுகம் 1981 ”சுவரில்லா சித்திரங்கள்”திரைப்படம் 48 ஆண்டுகளில் 75 படங்களில் நடித்துள்ளார். 1977ம் ஆண்டு ”பதினாறு வயதினிலே” திரைப்படம் முதல் 2025 ஆண்டுவரை”குபேரா” படம்வரை நடித்துள்ளார்.

48 ஆண்டுகளில் பாக்கியராஜ் ஹீரோவாக நடித்த படங்கள் 75

-1979 - 1989வரை - 17 படங்கள்
-1990 - 2000வரை - 11 படங்கள்

பத்திரிகை -”பாக்கியா” வார இதழின் நிறுவனர் மற்றும் ஆசிரியர்.

-அவரது மறைவுக்கு திரையுலக பிரபலங்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் ரசிகர்கள் இரங்கலைத் தெரிவித்தனர்.





France Open-2026 - Tennis Tournaments.....

## பிரான்ஸ் ரெனிஸ் பகிரங்கப் போட்டி - 2026

முதற்தடவை கிராண்ட்ஸ்லாம் கிண்ணத்தை வென்ற யேர்மன் வீரர்.. பிரான்ஸ் பகிரங்க ரெனிஸ் போட்டிகள் 24.05.2026 - 07.06.2026 முடிவடைந்தன. ஆண்கள் ரெனிஸ் போட்டியில் வரலாற்றுச் சாதனை படைத்தார் உலகில் தற்போது 2வது இடத்தில் இருந்த யேர்மன் நாட்டு வீரர் அலெக்ஸாண்டர் ஸ்வெரெவ்.

(French Open) பிரான்ஸ் பகிரங்க ரெனிஸ் இறுதிப் போட்டியில் தற்போது உலகில் 2ம் இடத்தில் இருக்கும் யேர்மன் நாட்டு வீரர் அலெக்ஸாண்டர் ஸ்வெரெவ் ( Alexander Zvereu) 10 வது இடத்திலிருக்கும் இத்தாலி நாட்டு வீரர் பிளாவியோ கோபொல்லி ( Flavio Cobolli ) என்பவரும் மோதியதில் 6:1, 4:6, 6:4,6-7, 6-1 என்ற புள்ளி அடிப்டையில் அலெக்ஸாண்டர் ஸ்வெரெவ் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் முதலாவது கிராண்ட்ஸ்லாம் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

## 19 வயதில் முதற்தடவை கிராண்ட்ஸ்லாம் கிண்ண த்தை வென்ற பெண்மணி...

போலந்து நாட்டைச் சேர்ந்தவர் 24 வயதான மாஜா ஸ்வாலின்கா (Maja Chwalinska) என்பவரும் ரஷ்ஷியாவைச் சேர்ந்தவரும்19 வயது மிரா அண்ட்ரீவா ( Mirre Andreeva) என்பவரும் மோதிக் கொண்டதில் 6:3 , 6:2 என்ற புள்ளி அடிப்படையில் மிக இலகுவாக வெற்றி பெற்றார் ரஷ்யா நாட்டு வீரமங்கை.

பிரான்ஸ் பகிரங்க ரெனிஸ் போட்டியில் இது இவரது முதலாவது வெற்றியும் மிகப்புகழ் பெற்ற கிராண்ஸ்லாம் வெற்றிக்கிண்ண முதலாவது வெற்றியும் ஆகும். இப்போட்டியில் வெற்றிபெற்ற மிரா அண்ட்ரீவா 28 லட்சம் யூரோக்களையும் தோல்வியடைந்த மாஜா ஸ்வாலின்கா 14 லட்சம் யூரோக்களையும் அள்ளிச் சென்றனர்.






# 10.07.2026 வரையான செய்தித் தொகுப்பு

## 23 வது உலகக்கிண்ண ஆண்கள் கால்பந்தாட்டப் போட்டி - 2026

23வது உலக ஆண்கள் கால்பந்தாட்டப் போட்டி இவ்வருடம் ஆனி மாதம் 11ஆம் திகதி முதல் ஆடி மாதம் 19ஆம் திகதி வரை அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிக்கோ ஆகிய மூன்று நாடுகளில் நடைபெற்றுவருகின்றது. முதல் முறையாக அமெரிக்கா கனடா மற்றும் மெக்சிக்கோ ஆகிய மூன்று நாடுகளில் நடைபெற்றுவருகின்றதுதற்போது நடைபெற்றுவரும் இப்போட்டியில் பல சாதனைகள், பல திருப்பங்கள், பல அதிருப்திகள், பல முறைப்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. தற்போதய நிலவரத்தின்படி இக்குறிப்பு பதிவாகும் 9.7.2026ல் ஆசியநாடுகள் அனைத்தும் தோல்வி. ஆபிரிக்கநாடு 1 தென்னமெரிக்கநாடு 1 ஐரோப்பிய நாடுகள் 6 என 8 நாடுகள் காலிறுதிப் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

பிரான்ஸ் - மொறோக்கோ - ஸ்பெயின் - பெல்ஜியம்

நோர்வே- இங்கிலாந்து - ஆஜர்ன்தீனா - சுவீஸ்லாந்து

இம்மாதம் 14, 15, 18 தேதிகளில் அரை இறுதிப் போட்டிகளோடு 19.07.2026 அன்று இறுதிப்போட்டி நடைபெறும். ஆகவே எந்தநாட்டு அணி வெற்றி பெறும் எனப் பொறுத்திருந்து பார்ப்போம்..பங்குபற்றும் நாடுகள் - 48

Gruppe A: Mexiko, Südafrika, Republik Korea, Tschechien

Gruppe B: Kanada, Bosnien und Herzegowina, Katar, Schweiz

Gruppe C: Brasilien, Marokko, Haiti, Schottland

Gruppe D: USA, Paraguay, Australien, Türkei

Gruppe E: Deutschland, Curaçao, Elfenbeinküste, Ecuador

Gruppe F: Niederlande, Japan, Schweden, Tunesien

Gruppe G: Belgien, Ägypten, Iran, Neuseeland

Gruppe H: Spanien, Kap Verde, Saudi-Arabien, Uruபரயல

Gruppe I: Frankreich, Senegal, Irak, Norwegen

வெற்றி பெற்ற நாடுகள்..

01-1930 – Uruguay
02-1934 – Italy
03- 1938 – Italy
04- 1950 – Uruguay
05- 1954 – Germany
06- 1958 – Brazil
07- 1962 – Brazil
08- 1966 – England
09- 1970 – Brazil
10- 1974 – Germany
11- 1978 - Argentina
12- 1982 - Italy
13- 1986 - Argentina
14- 1990 – Germany
15- 1994 - Brazil
16- 1998 – France
17- 2002 – Brazil
18- 2006 – Italy
19- 2010 – Spain
20- 2014- Germany
21- 2018 – France
22- 2022 – Argentina
23- 2026 - ???????

உலக கிண்ண வரலாற்றில் அதிக தடவைகள் வெற்றி பெற்ற நாடுகள்..

1-Brazil – 1958, 1962. 1970. 1994, 2002 = 5
2-Italy – 1934, 1938, 1982, 2006 = 4
3-Germany – 1954, 1974, 1990, 2014= 4
4-Argentina –1978, 1986, 2022 = 3
5-Uruguay 1930, 1950 = 2
6-France – 1998, 2018 = 2
7-England- 1966 = 1
8-Spain – 2010 = 1

தங்கக் காலணி விருது பெற்றவர்கள்

2026.....??????

2022- Lionel Messi – Argentina
2018- Luka Modric – Croatia
2014- Lionel Messi – Argentina
2010- Diego Forlan - Hungary
2006- Zinedine Zidane – France
2002- Oliver Kahn – Germany
1998- Ronaldo – Brazil
1994- Romario – Brazil
1990- S.Schillaci – Italy
1986- Diego Maradona – Argentina
1982- Paolo Rossi – Italy

நடைபெற்ற, நாடுகள்..

01-1930 - Uruguay
02-1934 - Italy
03-1938 - France
04-1950 - Brazil
05-1954 – Switzerland
06-1958 - Sweden
07-1962 - Chile
08-1966 - England
09-1970 - Mexico
10-1974 - West Germany
11-1978 - Argentina
12-1982 - Spain
13-1986 - Mexico
14-1990 - Italy
15-1994 - U S A
16-1998 - France
17-2002 - Japan, S.Korea
18-2006- Germany
19-2010- South Africa
20-2014 - Brazil
21-2018 - Russia
22-2022 - Qatar
23-2026 - USA, Mexico, Canada
24-2030 - Argentina
25-2034-Saudi Arabia



# அவுஸ்திரேலியா வரலாற்றில் முதன் முறையாக இராணுவத் தளபதியாக பெண் நியமனம்...

நாட்டின் பாதுகாப்புப் படைத் தலைமைகளில் செய்யப்படும் மறுசீர மைப்பின் ஒரு பகுதியாக, தனது 125 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக ஒரு பெண் இராணுவத்தை வழிநடத்துவார் என்று அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.தற்போது நாட்டின் கூட்டு நடவடிக்கைகளின் தலைவராகப் பணியாற்றிவரும் லெப்டினன்ட் ஜெனரல் சூசன் கோய்ல்(வயது55), ஜூலை மாதம் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்பார் என்று அரசாங்கம் திங்களன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தற்போதைய இராணுவத்தளபதிக்கு பதிலாக நியமனம் ஜூலை 2022-ல் அப்பதவியை ஏற்ற லெப்டினன்ட் ஜெனரல் சைமன் ஸ்டுவர்ட்டுக்குப் பதிலாக இவர் நியமிக்கப்படுவார்.இது குறித்து கருத்து தெரிவித்த பிரதமர் அந்தோனி அல்பானீஸ், ”ஜூலை முதல், அவுஸ்திரேலிய இராணுவத்தின் 125 ஆண்டு கால வரலாற்றில் முதன்முறையாக ஒரு பெண் தளபதியை நாம் கொண்டிருப்போம்” என்று கூறினார்

அவுஸ்திரேலிய இராணுவம் தனது படையில் பெண் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முயன்று வரும் வேளையில் இவரது நியமனம் வந்துள்ளது. பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார்ல்ஸ், கோய்லின் நியமனத்தை ஒரு ”மிகப்பெரிய வரலாற்றுத் தருணம்” என்று குறிப்பிட்டார்.




# கூடைப்பந்தாட்டத்தில் தமிழ் வீராங்கனை...

இலங்கை தேசிய கூடைப்பந்தாட்ட அணியில் முதன் முறையாக யாழ் மாணவி லூாட்சி நெஜினஸ் வரலாற்றுச் சாதனை..தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான 18 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை தேசிய அணி சார்பாக விளையாடிய யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடக் கல்லூரி (கொன்வென்ற் பாடசாலை) மாணவி லூாட்சி றெஜினஸ் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

தெற்காசிய கூடைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி வடமாகாணபாடசாலை மாணவியான இவர் தெரிவுசெய்யப்பட்டமை இதுவே முதல்முறையாகும்.இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்திய அணியுடன் மோதி ய இலங்கை அணி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைச் சவீகரித்துள்ளது. செல்வி லூட்சி அவர்கள் விளையாட்டுத்துறையில் இன்னும் பல சாதனைகள் படைக்க நாமும் வாழ்த்தி மகிழ்கின்றோம்!..




## மாற்றுத்திறனாளியின் உலகசாதனை...

## கால்கள் இல்லை...கைகளால் தவழ்ந்து ....எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து சாதனை! உலகை வியக்க வைத்த வீரர்

இந்த வரலாற்று சிறப்புமிக்க வெற்றியைப் பதிவு செய்த பின்னர், எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் நின்றவாறு "வீழ்ச்சிக்குப் பிறகு வாழ்க்கை முடிந்துவிட்டது என்று நினைத்தவர்களுக்கு ருஸ்தம் நபியேவ், என்பவர் "எவரெஸ்ட் 2026" என்ற வாசகம் அடங்கிய பலகையை ஏந்தியபடி அவர் தனது சமூக வலைத்தளத்தில் புகைப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

2026 மே 20ஆம் திகதி, நேபாள நேரப்படி காலை 8:16 மணிக்கு, மலையேற்ற வரலாற்றிலும் மனித வரலாற்றிலும் முதல் முறையாக, நான் (ருஸ்தம் நபியேவ்) எனது கைகளை மட்டுமே பயன்படுத்தி எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தேன். என்னைக் கண்காணித்துக்கொண்டிருக்கும் அனைவருக்கும் இந்த வெற்றியைச் சமர்ப்பிக்கிறேன்.

இந்தச் செயலின் மூலம் நான் கூற விரும்புவது ஒன்றே ஒன்றுதான். உங்களில் உயிர் இருக்கும் வரை போராடுங்கள்! தயவுசெய்து இறுதி வரை போராடுங்கள் அது உண்மையிலேயே மதிப்புமிக்கது!" என்று அதில் தன்னம்பிக்கையோடு பதிவிட்டுள்ளார்.



## 120 மணி நேரத்தில் 26 மாடிக் கட்டிடம்...

## உலகை வியப்பில் ஆழ்த்திய சீனாவின் புதிய உலக சாதனை

சீனா வெறும் 100 தொழிலாளர்களைக்கொண்டு ஐந்து நாட்களில் (120 மணித்தியாலம்) 26 மாடிகளைக்கொண்ட பிரமாண்ட கட்டிடம் ஒன்றைக் கட்டிமுடித்து உலகசாதனை படைத்து உலகையே வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றது. வழமையாக மேலத்தேய வளர்ந்த நாடுகளில் 26 மாடிக்கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கு குறைந்தது 3 - 4 ஆண்டுகள்வரை ஆகலாம். ஆனால் சீனாவிலுள்ள "பிராட் குறுாப் ஹோலன்" என்ற கட்டுமான நிறுவனம் தங்களின் அதிநவீன தொழில் நுட்பத்தின் மூலம் 5 நாட்களில் கட்டி முடித்திருக்கின்றது.. இச்சாதனைக்குச் சீனா முன்கூட்டியே தயாரிக்கப்படும் சுவர்கள், தூண்கள், கம்பிகள், பிரத்தியேக ஸ்டீல் பொருட்களைப் பயன்படுத்தி தொழிற்சாலைகளில் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டு வேலையை முடித்திருக்கிறது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட பிரமாண்ட பாகங்களை அசுரவேக இராட்சத கிரேன்கள் மூலம் மிகத்துல்லியமான முறையில் இணைத்து அசுர வேகத்தில் கட்டிமுடித்திருக்கின்றது. பாரம்பரிய கொன்கிறீட் கலவைகள் எதையும் பயன்படுத்தாமல் இக்கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளமை இதன் விசேட அம்சமாகும்."ஜிங்டு ஹோலன் பில்டிங்" என்று பெயரிடப்பட்டுள்ள இக்கட்டிடம் 1.5 லட்சம் சதுரஅடி பரப்பில் 208 குடியிருப்பு அறைக-ளுடன் அமைக்கப்பட்டுள்ளது. சத்தம் மற்றும் வெப்பம், குளிர் உள்ளே வராதவாறு 4 அடுக்குக் கண்ணாடி ஜன்னல்கள், சோபா, கட்டில் உள்ளிட்ட தளபாடங்களும் பொருத்தப்பட்டன.இக்கட்டிடத்தின் உறுதித்தன்மை குறித்து கேள்வி எழுந்தபோது "இது பாரம்பரிய சீமெந்து கட்டிடங்களைவிட 10 மடங்கு எடை குறைவானது என்றும், மிக மோசமான நிலநடுக்கம் ஏற்பட்டால்கூட அதைத்தாங்கும் சக்தி இக்கட்டிடத்திற்கு உண்டு" என்று கட்டுமான நிறுவ-னம் உறுதியளித்தது.




இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவன் இஷாங்க் சிங் (Ishank Singh) இலங்கையிலிருந்து இந்தியாவரை பாக்கு நீரிணையை 29 கிலோமீட்டர் தூரம் 9மணி 50 நிமிடங்களில் நீந்தி உலகசாதனை படைத்திருக்கிறார்.

கடந்த மாதம் 30ம் திகதி காலை தலைமன்னாரில் தனது நீச்சல் பயணத்தைத காலை 4-00 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 1-50 மணியளவில் தமிழ்நாட்டின் தனுஷ்கோடியை அடைந்தார். இவர் தான் வாழ்ந்த பிரதேசத்திலுள்ள அணை ஒன்றில் தினமும் 4 - 5 மணி நேரம் நீச்சல் பயிற்சியை மேற்கொண்டு இந்தச் சவாலான கடல் நீச்சலை அவர் வெற்றிகரமாக முடித்திருக்கிறார். இஷாங்கின் வரலாற்றுச் சாதனையை ஜார்கண்ட் முதலமைச்சர் உட்படப் பலரும் பாராட்டிப் பரிசில்களையும் வழங்கினர்.

உறுதியும் முயற்சியும் கடும் உழைப்பும் இருந்தால் வயதுவேறுபாடில்லாமல் எந்த வயதிலும் சாதனை படைக்கலாம் என்ற இச்சிறுவனை நாமும் வாழ்த்தி மகிழ்வோம்!...



# உலக சாதனை படைத்த பரதநாட்டியக் கலைஞர்கள்... இலங்கையில் சாதனை...

இந்திய ”சங்கமம் குளோபல் அக்கடமி” மற்றும் ”சங்கமம் லியா ஹாலிடேஸ்” நிவனங்களின் ஏற்பாட்டில் ”சங்கமம்-2026” எனும் மாபெரும் பரதநாட்டிய நிகழ்வு கொழும்பு காலிமுகத் திடலில் மிக விமரிசையாகக் கடந்த 14.06.2026 அன்று நடைபெற்றது.

இலங்கைப் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீபன் அவர்களின் வழிகாட்டலில் நடத்தப்பட்ட இவ்விழாவில் 5.000 பரதநாட்டியக் கலைஞர்கள் ஒரே மேடையில் அணிதிரண்டு 10.000 சலங்கைகளை ஒரே தாளத்தில் ஒலிக்கச்செய்து கின்னஸ் உலகசாதனை படைத்தனர். கடல் அலைகளின் ஓசையை விஞ்சிய சலங்கை ஒலியால் காலி முகத்திடல் தமிழ்க் கலாச்சாரத்தின் பெருமித அடையாளமாகத் திகழ்ந்தது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் சாதனைக்கான கின்னஸ் சான்றிதழைப் பெற்றுக்கொண்டார். அப்போது உரையாற்றிய அவர் இலங்கை மண்ணில் தமிழ்க் கலையின் பெருமையை உலகிற்கு உணர்த்திய இந்தத் தருணம் ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் கிடைத்த பெருமையாகும் எனக் குறிப்பிட்டார்இந்த வரலாற்று நிகழ்வில் இலங்கை அமைச்சர்கள், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட பல விசேட அதிதிகளும் பல்லாயிரக்கணக்கான கலை ஆர்வலர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# இலங்கையின் மூத்த ஊடகவியலாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் காலமானார்

இலங்கையின் மூத்த தமிழ்-ஆங்கில ஊடகவியலாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் கடந்த 17.05.2026 ஞாயிற்றுக் கிழமை கனடாவில் காலமானார். இலங்கை ஊடகத்துறை உலகமானது இன்னுமொரு டி.பி.எஸ். ஜெயராஜைக் காணப்போவதில்லை என்றே சொல்லலாம்.

இலங்கையில் நீண்ட காலம் நீடித்த கொடூரமான இனப்படுகொலைகளின் போது ஏற்பட்ட திருப்பங்களையும் மாற்றங் களையும் உலகிற்குத் தெரிவிப்பதற்காக, அச்சுறுத்தல் களையும் தொடர்ச்சியான ஆபத்துகளையும் துணிச்சலுடன் எதிர்கொண்டவர் ஜெயராஜ். அத்தகைய மோசமான காலப் பகுதியில் பல ஊடகவியலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்த போதிலும், கிட்டத்தட்ட அனைத்துத் தமிழ் தரப்புடனும் அவருக்கு இருந்த தொடர்பை மிகச் சிலரே பெற்றிருந்தனர்.சிறந்த ஊடக பணி.. அதிலும் அவரது குரலும் எழுத்துகளும் பெற்றிருந்த பரந்த நம்பகத்தன்மையை குறைவானவர்களே பெற்றிருந்தனர். அவர் பிறந்து 37 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையிலிருந்து வெளியேறி ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் கனடாவில் வசித்து வந்த போதிலும், அவரது இதயம் எப்போதும் இலங்கைக்காகவும், குறிப்பாகத் தமிழ் மக்களுக்காகவுமே துடித்தது.

ஜெயராஜ் மே 17, 2026 அன்று தனது இறுதி மூச்சை விடுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு டொராண்டோவில் உள்ள அவரது இல்லத்தில் அவரை ச் சந்தித்த ஒரு நண்பர், அவர் இலங்கை பற்றியும் சாதாரண தமிழ் மக்களின் முடிவில்லாத துயரங்கள் பற்றியும் மட்டுமே பேசினார் என்று கூறினார்.ஜெயராஜுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தியது என்னவென்றால், அவர் தனக்கென்று ஒரு தனித்துவமான சிந்தனையைக் கொண்டிருந்தார், பெரும்பாலானோரிலிருந்து மாறுபட்டு சிந்திக்கும் திறனைப் பெற்றிருந்தார், மேலும் அவர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் உணர்ச்சிகளால் அடித்துச் செல்லப்படாத ஆற்றலைக் கொண்டிருந்தார்.

## இறுதிப் போரின் விளைவுகள்..

அவர் தமிழ் பத்திரிகையுலகில் ஆறு ஆண்டுகால அனுபவத்தைப் பெற்றிருந்தார், முன்னணி செய்தி நாளிதழில் தனது வாழ்க்கையைத் தொடங்கி, 1981இல் கொழும்பில் ஆங்கிலப் பத்திரிகையுலகிற்கு மாறினார். பின்னர் அவர், யாழ்ப்பாண வார இதழின் துணை ஆசிரியரானார், அது மூடப்படும் வரை தமிழ் மக்களின் குரலாக விளங்கியது.

தனது வெளிப்படையான கருத்துக்கள் அவருக்கு முதலில் எச்சரிக்கையாகவும் பின்னர், அச்சுறுத்தல்களாகவும் மாறின. இதன் காரணமாகவே, 1988 ஆம் ஆண்டு ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பயில்வதற்காக அமெரிக்கா சென்ற ஒரு வருடத்திற்குப் பிறகு, 1989இல் ஜெயராஜ் கனடாவிற்கு இடம்பெயர்ந்தார்.

வேறு எந்த இலங்கை ஊடகவியலாளராலும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அவர் எழுதியது போல் எழுத முடியவில்லை - மேலும் இலங்கையில் உள்ள முக்கியப் புள்ளிகள் மற்றும் சாதாரண அரசியல் ஆர்வலர்கள் என அனைத்துத் தரப்பினரிடமும் அவருக்கு இருந்ததைப் போன்ற தொடர்பைப் பெற முடியவில்லை என்றே சொல்லலாம்.

ஜெயராஜின் எழுத்துக்கள்தான் தமிழ் ஆயுதப் போராட்டம், தமிழ் தேசிய அரசியல் மற்றும் நீண்ட காலப் போரின் கொடூரமான விளைவுகளை ஆங்கிலம் பேசும் ஏனைய சமூகங்களின் கவனத்திற்கும் உலகிற்கும் கொண்டு சென்றன என்று கூறினால் அது மிகையாகாது.



## யாழ்மாவட்ட புதிய ஆண்டகை...

யாழ் மறைமாவட்டத்தின் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஓய்வுபெற்றுள்ளதால் புதிய ஆயராக கொழும்பு உயர் மறைமாவட்ட துணைஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித்பிள்ளை பதவி ஏற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று நாட்டின் பல பகுதிகளிலும் கல்வி, சமயப் பணிகளைச் செய்துவந்திருக்கிறார். பிரித்தானியா, யாழ் பல்கலைக் கழகங்களில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுக்கொண்ட இவர் 2000 ஆண்டு ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டிருக்கிறார்.

புதிய ஆயர் யாழ் மறைமாவட்டத்தில் பதவி ஏற்றமையை கத்தோலிக்க மக்கள் மட்டுமல்ல அனைத்து யாழ் மக்களும் வாழ்த்தி வரவேற்றுள்ளனர். புதிய ஆயர் அவர்களின் அருட்பணி சிறக்க நாமும் வாழ்த்துகின்றோம்...

# இலங்கையின் சுகாதாரச் செய்திகள் சில...

(1)இலங்கையில் வாழும் நகர்ப்புற மக்களில் 30 - 32 வீதமானோருக்கு கொழுப்புக் கல்லீரல் நோய் பாதிப்பு. விரைவுணவு, உணவுப்பழக்கம், உடலுழைப்புக் குறைவு போன்றவையே பிரதான காரணம் என மருத்துவ அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (2) நாட்டில் வருடாந்தம் சுமார் 1.400 பெண்கள் கர்ப்பப்பைவாய் புற்றுநோயினால் பாதிப்படைகிறார்கள். சுமார் 800 பெண்கள் மரணமடைகிறார்கள் எனச்சுகாதாரப் பணியகம் அறிவித்தது.

(3) 01.01.2026 - 10.05.2026 வரை 27.465 டெங்கு நோயாளர்கள் அடையாளம். 14 பேர் இறப்பு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. ஹம்பகா, களுத்துறை மாவட்டங்களில் அதிகம்பேர் பாதிப்பு. (4) இலங்கை நகர்ப்புறங்களில் வசிக்கும் சிறுவர்களில் 10 - 15 வீதம்பேர் உடற்பருமனாகக் காணப்படுகிறார்கள். இதனால் பலவித நோய்களுக்கு ஆளாகுகிறார்கள். அரசுக்கும் பெருந்தொகைப் பணம் செலவாகின்றது என்று சிறுவர் நலப்பாதுகாப்பு சபையினர் அறிவித்துள்ளனர். (5) இலங்கையில் புகையிலை மற்றும் மதுப்பழக்கத்தால் வருடாந்தம் 22.000 பேர் இறப்பு என சுகாதார அமைச்சு அறிவித்துள்ள (6) இலங்கையின் அரச மருத்துவ மனைகளில் தற்போது சுமார் 10.000 இருதய நோயாளிகள் சத்திர சிகிச்சைக்காக நீண்ட நாட்களாகக் காத்திருக்கிறார்கள் என மருத்துவ சங்கம் தெரிவித்தது. (7) நாட்டில் வாழ்வோரில் 5 பேருக்கு ஒருவருக்கு ( 20 வீதம்பேர் ) தொற்றா நோய்கள் காணப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. நாட்டில் தற்போது இரத்தப்புற்றுநோயாளிகள் 15.000 முதல் 18.000 பேர்வரை காணப்படுகிறார்கள் என விசேட மருத்துவர் ஒருவர் அறிவித்துள்ளார்.

(8) இலங்கையில் மூன்று பேரில் ஒருவருக்கு உயர் இரத்த அழுத்த நோய் காணப்படுவதாகவும் இவர்களில் 69 வீதம்பேர் சிகிச்சை பெறுவதில்லை எனவும் அரச புள்ளிவிபரம் ஒன்று அறிவித்துள்ளது. (9) இலங்கையில் புகையிலைப் பாவனையால் 200 க்கும் அதிகமான நோய்கள் ஏற்படுவதாகவும் வருடாந்தம் 2000 பேர்வரை உயிரிழப்பு. இதனால் அரசுக்கு வருடம் 214 மில்லியன் ரூபா மேலதிகச் செலவு ஏற்படுகின்றது என்று புகையிலை அதிகார சபை அறிவித்துள்ளது.
(10) 01.01.2026- 31.05.2026வரை 35.000 டெங்கு நோயாளர்கள் அடையாளம். 20 பேர் இறப்பு என டெங்கு நோய் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்தது.
(11) தற்போது இலங்கையில் 237 பேருக்கு மூளைக்காய்ச்சல் நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இது தொற்றும் அபாயம் காணப்படுவதால் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்கும்படி சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (12) இலங்கையில் புற்றுநோய் அதிகரிப்பு 20 ஆண்டுகளில் மும்மடங்காக அதிகரித்துள்ளது. 2024ம் ஆண்டில் 35.855 பேராக உயர்ந்துள்ளது. 16.398 ஆண்கள் 19.457 பெண்கள் தற்போது நோயாளிகளாக இருக்கிறார்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
(13) நாட்டில் வாழும் சிறுவர்களில் ஐந்தில் ஒரு பாடசாலை மாணவருக்கு ஊட்டச்சத்து குறைபாடு காணப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
(14) நாட்டிலுள்ள பெண்களின் சனத்தொகையில் 15 வீதமானோர் உடற்பருமன் பிரச்சனைகளால் பாதிப்பு. இதனால் பலர் இறப்பதாகவும் அரசுக்குப் பெருந்தொகைப் பணம் செலவாகின்றது எனவும் அரச புள்ளிவிபரம் தெரிவித்தது.

# இலங்கைச் செய்திகள் சில...

-சர்வதேச ஊடகங்களின் சுதந்திர அளவீட்டில் இலங்கை 139வது இடத்தில்.180 நாடுகளிடையே இந்தக் கணிப்பு எடுக்கப்பட்டது. 2025ஆண்டில் 150 வது இடத்தில் இருந்துள்ளது. உலக ஊடக அமைப்பு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

-01.01.2026 முதல் காலாண்டில் 19.600 கோடி ரூபா பெறுமதியான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதாக மத்திய வங்கியின் அறிக்கை தெரிவித்தது.
-இந்த ஆண்டில் 01.01.2026 -30.04.2026 வரை 2.15.000 வாகனங்கள் இறக்குமதி. 1.44.000 மோட்டார் சைக்கிள், 45.000 கார்கள், மற்றும் ஏனைய வாகனங்களாகும்.

-யாழ் பல்கலைக் கழகத்தில் தற்போது 14.600 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள இதில் 9.000 மாணவர்கள் தமிழ் மாணவர்கள் என சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவித்தார்.

-போரில் மடிந்த இலங்கைப் படை படைவீரர்களின் 17வது ஆண்டு நினைவையொட்டி 5.289 முப்படையினருக்கு ஜனாதிபதி பதவி உயர்வு வழங்கியுள்ளார்.

-மட்டக்களப்பில் புதிய பொது நூலகம் ஒன்றை ஜனாதிபதி திறந்து வைத்துள்ளார்.

-பல்வேறு காரணங்களால் இந்த ஆண்டு 1.1.2026 - 31.05.2026வரை 128 யானைகளும் 35 மனிதர்களும் இறந்துள்ளனர் என வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

-கடந்த வைகாசி, ஆனி மாதங்களில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை யால் 8 மாவட்டங்களிலுள்ள 7.983 குடும்பங்களைச் சேர்ந்த 31.072 பேர் பாதிப்பு என அரசு அறிவித்துள்ளது.

--இந்திய அரசாங்கம் இலங்கைப் பொலிசுக்கு 134 கெப் ரக வாகனங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

-40 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இலவச விசா வழங்குவதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளது.

-இலங்கையில் தெங்குப்பொருட்கள் ஏற்றுமதியால் 406 மில்லியன் டொலர் வருவாயாகக் கிடைத்திருப்பதாக ஏற்றுமதிச் சபை அறிவித்தது.

-மத்தியகிழக்கு நாடுகளில் ஏற்பட்ட போர் நடவடிக்கைகளால் இலங்கையில் சுமார் 47 லட்சம்பேர்வரை கடுமையான உணவுத்தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளார்கள் என உலக உணவுத்திட்ட அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

-கடந்த 5 மாதங்களில் பதுளை, ஊவா மாகாணத்தில் 80 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகியிருப்பதாகச் சிறுவர் பாதுகாப்புச் சபையி-னர் அறிவித்துள்ளனர்.

-அநுராதபுரத்தில் சிறுமி ஒருவர் பௌத்த துறவியால் பாலியல் வன்கொடுமை வடக்கு, கிழக்கு, தென்னிலங்கை எங்கும் ஆர்பாட்டப் பேரணிகள் இடம்பெற்றன.

-இரு சிறுமிகள் வன்புணர்வு விடயமாக புத்த துறவி ஒருவரும் இஸ்லாமிய மௌலவி ஒருவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

-2018 - 2022 காலத்தில் 488 சிறுவர்கள் புத்த துறவிகளால் பாதிக்கபட்டனர் என சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

-இலங்கையிலுள்ள 60 வீதமான கட்டடங்கள் முறையான அனுமதிகள் இல்லாமல் கட்டப்பட்டிருக்கின்றன. இதனால் பல ஆபத்துகள் நேரிட வாய்ப்புகள் உள்ளன என தேசிய கட்டட நிறுவனம் அறிவித்துள்ளது.

-கடந்த 7 மாதங்களில் இடம்பெற்ற பொலிசாரின் சுற்றிவளைப்பு தேடுதல்களில் நாடுமுழுவதும் 1.89.817 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

-கடந்த வெசாக் தினத்தில் நாடுமுழுவதும் சிறைகளிலுள்ள சிறு குற்றவாளிகள் 61 பேரை ஜனாதிபதி பொது மன்னிப்பின்கீழ் விடுதலை செய்துள்ளார்.

-வெசாக் தினம் மே 29, 30 திகதிகளில் மட்டும் வீதி விபத்துக்களால் 24 பேர் மரணம்

-களுத்துறை மாவட்டத்தின் ஹொரண என்ற இடத்தில் அரசாங்க அதிகாரம் பெறாமல் இயங்கிவந்த முதியோர் இல்லத்தில் தீ விபத்து. 12 முதியோர் மரணம். 8 பேர் காயம்.

-யாழ்-செம்மணியில் புதைகுழிகள் தோண்டும் பணிகள் தொடர்கின்றன. கடந்த 12.06.2026 வரை 341 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக பத்திரிகைச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

-60 இணையவழி நிதி மோசடிகள் இடம்பெற்றிருப்பதாக பொலிஸ் கண்காணிப்புப்பரிவு அறிவித்துள்ளது.

-யாழ்ப்பாண அரசை ஆண்ட தமிழ் மன்னன் 2வது சங்கிலி மன்னனின் 407வது ஆண்டு நினைவு தின விழா யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது.

-2018 - 2024 ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு காரணங்களால் 2.67.138 மாணவர்கள் பாடசாலைக் கல்வியைத் தொடராமல் பாதியி-லேயே விலகியிருக்கிறார்கள் என பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

-01.01.2026 - 30.06.2026 வரை இலங்கையில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 1.424 பேர் பலி. இவர்களில் 488 பேர் மோட்டார் சைக்கிள் விபத்துக்களிலும் 484 பேர் பாதசாரிகளும் விபத்துகளில் உயிரிழந்திருக்கிறார்கள் என பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவித்தது.






# வெனிசூலா நிலநடுக்கத்தில் 2.000 பேர்வரை பலி.

58.000 பேர்வரை காணாமல் போயுள்ளனர். தென்னமெரிக்க நாடான வெனிசூலாவில் கடந்த 24.06.2026 அன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1.000 அதிகம்பேர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 58.000 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

24.06.2026 அன்று இரட்டை நிலநடுக்கம் இடம் பெற்றிருக்கின்றன ரிக்டர் அளவுே-காலில் 7.2 மற்றும் 7.5 என இரு சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன.அத்துடன், 30.000-க்கும் அதிகமானோர் காயம் அடைந்துள்ளதாக வெனிசுலாவ-ின் இடைக்கால அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் அவசரநிலை பிறப்பிக்கப்படுவதாக அறிவித்த இடைக்கால அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ், பல்வேறு கட்டிடங்கள் இடிந்து விழுந்துள்ளன. என்றும் பல ஆயிரக்கணக்கானோர் குடியிருப்புகளை இழந்து அகதிகள் முகாம்களில் தஞ்சம் அடைந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

வெனிசூலாவின் தலைநகர் கரகாஸ் (Caracas ) நகரிலிருந்து 170 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள ”மோறன்” ( Moron ) நகரம் ஒன்றில் இடம்பெற்ற இந்தப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் பல உலக நாடுகளின் மீட்புப் பணியாளர்கள் விரைந்துள்ளனர். அத்துடன் பல்வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றன.வசதிபடைத்த நாடுகள் இந்தப் பேரனர்த்தத்திற்கு உதவும்படி ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மக்கள் அனைவரும் விழிப் புடனும், பாதுகாப்புடனும் இருக்கவேண்டும் என மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், இடிந்த கட்டிடங்களில் பல நாடுகளின் மீட்புப் படையினர் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருவதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனிதநேய பேருதவி 1.700-00 யூரோ

நோயாளிகளின் உயிர் காப்பு நிதி உதவி..அன்பளிப்புகள்:-
யூரோ

500-00 - பெயர்குறிப்பிடவிரும்பாத யேர்மனியில் பிறந்த செல்வி ஒருவர்.
300-00 - திரு ஐ.இரகுநாதன் மொழிபெயர்ப்பாளர் - Mülheim/Ruhr
200-00 - திரு சின்னையா வேலும்மயிலும் - Westendorf

100-00 - திருமதி புவனேஸ்வரி சிறீஸ்கந்தராசா - Solingen

100-00 - திருமதி கலைவாணி ஏகானந்தராசா - Weeze
100-00 - திருமதி றோகினி - இரத்தினசிங்கம் - Duisburg
100-00 - திருமதி இராஜேஸ்வரி சிவராசா - Duisburg

100-00 - செல்வி காத்மி வரதராசன் - Düsseldorf

100-00 - திரு பொன்னையா பகீரதன் - Duisburg
050-00 - திரு குட்டியர் இராமசாமி - Haltern
050-00 - திரு நித்தியானந்தம் சிவானந்தம் - Dortmund
------------
1.700-00 மொத்த வரவு

அனுப்பியது:-

781-94 - 3.00.000-00 ரூபா -03.06.2026 -திருகொணமலை அரிமா சங்கம் (ரோட்டரி சங்கம்) ஊடாக-செல்வி சுதேசானந்தன் திலக்சிகா (இரண்டு சிறுநீரகங்களும் பழுது)

300-00 - 1.10.849-30 ரூபா - 03.06.2026 - துணுக்காய் ஒளிரும் வாழ்வகம்

618-06 - - 10.07.2026 - துணுக்காய் ஒளிரும் வாழ்வகம் ஊடாக செல்வி ரஞ்சன் தேனுசா (இருதய நோயாளி) மற்றும் சுகாதார உதவிகள் பெறும் வறியவர்கள்¸ மற்றும் தாய் அல்லது தந்தையை இழந்த வறிய குடும்பங்களின் சுகாதார, வாழ்வியல் தேவைகளுக்காக
---------------

1.700-00 மொத்தச் செலவு

(1)
சிறுநீரக நோயாளி
செல்வி சுதேசானந்தன் திலக்சிகா
பிறந்ததிகதி 28.02.2002
பிரதானவீதி நித்தியபுரம்
திருகோணமலை

(2)
இருதய நோயாளி
செல்வி ரஞ்சன் தேனுசா
பிறந்ததிகதி 12.09.2002
ஆலங்குளம் - வசந்தபுரம் - துணுக்காய்

( 75 ம்பக்கம் பார்க்கவும் )

## மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும் கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்று உதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1-3 திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு

உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலினிசா (பி.தி 10.04.2014)
செல்வகுமார் சதுமிகா (பி.தி 12.11.2010)
றொனி டிலக்சனா

(பி.தி 28.10.2015)

.......................................................................................................................

4-5 திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- மகேஸ்வரன் அர்ச்சனா(பி.தி 19.05.2009)

.......................................................................................................................

6- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சுரேஸ்குமார் மனோறஞ்சனி (30.08.2004)

.......................................................................................................................

7- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சிவகுமார் சிரோமி (பி தி 30.08.2014)

.......................................................................................................................

8-9 திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
அமுதசுரபி அறக்கட்டளை - வவுனியா
உதவி பெறுவோர்..செல்வி சிற்பவானந்தராசா டேன்சிகா பிதி

10- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா

உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 ) ..

.......................................................................................................................

11- Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)

.......................................................................................................................

12- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

.......................................................................................................................

13 திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம் - தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - சுரேஸ் சுஜந்தினி (பிதி 23.10.2013)

.......................................................................................................................

14- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நல்லரெட்ணம் துர்க்கா பிதி 25.11.2003

.......................................................................................................................

15- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நிசாந்தன் லதுமிக்கா பிதி 23.02.2015

.......................................................................................................................

16- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg - 480-00 யூரோ
ஞானசம்பந்தர் குருகுலம் - மட்டக்களப்பு
உதவி பெறுபவர் சத்தியசீலன் சாயிரிதன் பிதி 07.06.2010

.......................................................................................................................

17- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim - 2.400-00யூரோ
நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம்(1200-00 +1200-00)
உதவி பெறுபவர் இல்லப் பிள்ளைகள் அனைவரும்

-----------------------------------------------------------------------------------------------------------------.

**பொறுப்பெடுத்தவர்கள் 14 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)**

**உதவி பெறுவோர் 16 பிள்ளைகள் + மாங்குளம் நல்லாயன் சிறுவர் இல்லம் (தாயகம் - சிறீலங்கா)**

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-05-2026 - 29-06

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00

(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00

(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

03. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00

(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திரு. Johannas Gruendler - Köln + 80-00

(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

05. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen + 100-00

(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு-

06- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen + 120-00

(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen + 80-00

(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

08- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg + 80-00

(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

09- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg + 80-00

(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

10- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim+ 400-00

(நல்லாயன் சிறுவர் இல்லம் கல்வி மேம்பாட்டு மாதாந்த உதவ ------------------

+ 1.180-00+1.180-00

---------------

+1.209-06

| | | | |
|---|---|---|---|
| முற்பக்கப்படி | | | + 1.209-06 |

**அனுப்பியது...**

| | | | |
|---|---|---|---|
| | | யூரோ | |
| 1) ஒளிரும் இல்லம்"மல்லாவி-துணுக்காய் (வைத்திய நிதி உதவி ) | - | 618-06 | |
| 3) நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம் (மேரி + மங்கை கல்வி நிதி உதவி) | - | 400-00 | |
| | - | 1.018-06 | - 1018-06 |
| | | | + 191-00 |

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

| | | | |
|---|---|---|---|
| 01.05.2026 - 31.05.2026 | - 18-71 | | |
| 01.06.2025 - 30.06.2025 | - 20-69................................... | | - 39-40 |
| 31.10.2025 மீதி கையிருப்பு | | | + 151-60 |

---

## 71 ம் பக்கத்தொடர்ச்சி...

(1) இரண்டு சிறுநீரகங்களும் பாதிப்பு அவரது தாயார் ஒரு சிறுநீரகத்தைக் கொடுக்கவுள்ளார்.

(2) இதயத்தில் ஓட்டை, இருதய வால்புச் சுருக்கம்..

தாயகம்வாழ் ஏழை மக்களின் நோய் உயிர் காப்பு நிதி வழங்கமாறு எமது வாசகர்களிடமும் மனிதநேயம் மிக்கவர்களிடமும் நிதி உதவி வழங்குமாறு கடந்த 12.06.2026ல் கடிதம், வட்சப், முகநு-ால் ஊடாகக் கேட்டிருந்தோம். அதன்படி நேயம் மிக்க உறவுகள் தமது நிதிப் பங்களிப்பை அனுப்பி இருந்தார்கள். இந்த நிதி பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் ஊடாக உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.இந்த நோயாளிகளுக்கு உதவும் பணியில் மன-ிதநேய உதவிகளை வழங்கிய அத்தனை நல்லுள்ளங்களுக்கும் மிகப்பெரிய நன்றிகள்.

"" ஆண்டவனை கைகூப்பி வணங்கும் கைகளைவிட ஏழைகளுக்குக் கொடுக்கும் கைகளையே ஆண்டவன் விரும்புகின்றான் ""

ஆசிரியர் - மண் சஞ்சிகை - யோர்மனி

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

Reg No: MU/DS/TNK/RVSS/22/2015
Mobile:-0774868085
Vhatsapp:-0774868085
திகதி: 14/05/2021

திரு.வை.சிவராசா,

மண்சஞ்சிகை,

யேர்மனி.

நன்றி நவிலல்

29.04.2026 திகதிய கடிதத்திற்கு அமைவாக தங்கள் அனுசரனையில் எமது அமைப்பிற்கான பல தரப்பட்ட உதவிகளை எமக்கு வழங்கியிருந்தீர்கள் அதனையிட்டு எமது அமைப்பின் சார்பில் நன்றிகளை கூறிக்கொள்வதோடு நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். மேற்படி திகதிய கடித்தில் குறிப்பிட்ட நிதி எமக்கு கிடைத்திருந்தது (ரூபாய் 4.65.567.49 நான்கு இலட்சத்து அறுபத்தையாயிரத்து ஐநூற்று அறுபத்தி ஏழு ரூபாய் நாற்பத்தொன்பது சதம் ) 1.260.00 யூரோ .

மேற்குறிப்பிட்ட தொகையில் ரூபாய் 354718.60 சதத்தினை கல்வி உதவித்தொகை வழங்கப்படும் 7 மாணவர்களுக்கான நிதியும்

எமது ஒளிரும் வாழ்வின் பயனாளியான செல்வி ரஞ்சன் தேனுசா அவர்களின் மருத்துவ செலவிற்காகவும் இரத்தம் சுத்திகரிக்கப்படும் நோயாளிகளுக்கான சத்துணவுக்காகவும் ரூபாய் 1.10.849.30 சதம் கிடைத்திருந்தது இந் நிதியை உரிய தேவைக்காக பயன்படுத்துவோம் என்பதையும் தங்களுக்கு தெரியப்படுத்துவதோடு நாம் முன் வைக்கின்ற அத்தனை உதவிகளுக்கும் எமக்கு உரிய நேரத்தில் உதவியை வழங்கும் மண்சஞ்சிகை பிரதம ஆசிரியர் வை.சிவராசா அவர்களுக்கு நாம் என்றும் நன்றியுடைளவர்களாக இருப்போம்.

*கடிதம் தாமதத்திற்கு மன்னிக்க வேண்டும்*

குறிப்பு:-

தங்களால் வழங்கப்பட்ட பணத்தினைப் பெற்றுக்கொண்டமைக்கான எமது அமைப்பின் 4455 ம் இலக்க பணவரவுப் பற்றுச்சிட்டை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

"தங்களின் உதவிக்கும் ஆதரவிற்கும் என்றும் எமது நன்றிகள்"

தலைவர்,

ஒளிரும் வாழ்வு அமைப்பு,

தலைவர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

www.olirumvaalvu.com · olirumvaalvuthunukkai2012@gmail.com · olirumvaalvu thunukkai

மு. நந்தன்
ஆலங்குளம்,
வசந்தபுரம்
துணுக்காய்

தலைவர்,
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்.

மருத்துவத்திற்கான உதவிகோரல் தொடர்பானது.

மேற்படி முகவரியில் வசிக்கும் முத்துவேல் நந்தன் ஆகிய நான் அறியத்தருவது யாதெனில் எனது மகள் நந்தன் தேனுஜா (2008.09.12) பிறந்து 3 மாதத்தில் இருதய நோயால் பாதிக்கப்பட்டு இருக்கின்றார். பிறப்பிலேயே இருதயத்தில் ஓட்டை மற்றும் வால்வு சுருக்கம் போன்ற பிரச்சினைகள் இருந்து வருகின்றது. அதற்காக முன்னரும் மூன்றிற்கு மேற்பட்ட சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு பின்னர் 2017ம் ஆண்டு பாரிய சத்திர சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போதும் பாரிய சத்திர சிகிச்சைக்காக 2026.12.21ம் திகதியால் இருந்து தற்போது வரை கொழும்பு லேடி றிட்ஜ்வே வைத்தியசாலை (நொனா வோட்) யில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றோம். அதற்கான உணவு, மருந்துச் செலவு, போக்குவரத்து செலவு என்பவற்றை மேற்கொள்ள முடியாதுள்ளது. நான் தினக்கூலி வேலை செய்தே எனது குடும்பத்தை கவனித்து வருகிறேன். தற்போது இவற்றுக்கான செலவினை மேற்கொள்வதற்கு எனது குடும்ப நிலைமையை கருத்தில் கொண்டு உதவியினை பெற்றுத்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி

இங்ஙனம்
[signature]

077-2278473

**Good Shepherd Child Development center,**

**Mullai Road, Mankulam,**

**Srilanka.**

E-mail – mankulamcdc@gmail.com

Tel. No. – 0212060077/+94 775924582

Date : 03.06.2026

அன்பின் மண் சஞ்சிகை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி நிறை உள்ளத்துடன் வரைவது,

தாராள உள்ளம் கொண்டோரை இனங்கண்டு பலர் வாழ்வு ஒளி பெற கருவியாக இருந்து செயற்படும் மண் சஞ்சிகைக்கு நன்றி கூற வார்தைகள் இல்லை. 30.04.2026 அன்று மண்சஞ்சிகை அமைப்பினூடாக திருமதி மேரி விஜயகுமார் மற்றும் திருமதி மங்கையற்கரசி சிவராசன் ஆகியோர் அனுப்பிவைத்த ரூபா 146,429.97 சதம் (400 யூரோ) எம்கரம் கிடைத்தது. வேலைப்பழு காரணமாக கடிதத்தை தாமதமாக அனுப்புவதற்கு மன்னிக்கவும்.

பிள்ளைகளுக்கு தொடர்ச்சியாக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மிகுந்த அர்பணிப்புடன் கற்பிக்கின்றார்கள். இந்நாட்களில் பிள்ளைகள் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் பாடசாலையிலும் இல்லத்திலும் பங்குபற்றி வருகின்றனர். விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஒருவரின் உதவியினால் தொடர்ச்சியான பயிற்சிகளும் கொடுக்கின்றோம். எம்பிள்ளைகள் சகல துறைகளிலும் முன்னேற வேண்டும் என்பதே எமது ஒரே நோக்கம். இதற்கு உங்களை போன்றோரின் ஒத்துழைப்பு பெரும் பலமாக உள்ளது.

இம்முறை எட்டு பிள்ளைகள் கல்வி பொது சாதாரண தரப் பரீட்சை எழுதி உள்ளனர். அவர்களில் மூவரை அவர்கள் குடும்பத்துடன் மீளிணைத்து உள்ளோம். மற்றவர்கள் பரீட்சை பெறுபேறுகள் வரும் வரை கணனி மற்றும் தையல் பயிற்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். மற்றும் இம்முறை உயர்தர பரீட்சை எழுதும் இரு மாணவியர்கள் ஆசிரியர்கள் இன்மையால் மல்லாவிக்கு மேலதிக வகுப்புகளுக்கு அனுப்பி கற்பிக்கின்றோம்.

மீண்டும் மண் சஞ்சிகை முலம் நிதிப்பலம் பெற்றுத்தரும் உங்களுக்கு நன்றி கூறி இறைவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நிறைவாக ஆசீர்வதித்திட உங்களுக்காக தினமும் எம் செபத்தில் மன்றாடுகின்றோம்.

நன்றி

இப்படிக்கு,
என்றும் உங்கள் அன்பு சேவையை மறவாத,
பிள்ளைகள் மற்றும் அருட்சகோதரிகள்.

S. Sumithra.

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාල්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

Reg No: MU/DS/TNK/RVSS/22/2015
Mobile:-0774868085
Vhatsapp:-0774868085
திகதி:25/04/2021.

திரு வை.சிவராசா,

மண்சஞ்சிகை,

யேர்மனி.

## உதவிகோரல்

எங்களது ஒளிரும்வாழ்வு அமைப்பானது **துணுக்காய் பிரதேசம்,பாண்டியன்குளம்** பிரதேச மாற்றுத்திறனாளிகள் **பெண் தலைமைத்துவ** குடும்பங்கள்,**ஆதரவற்ற முதியோர்கள் தாய் தந்தையை இழந்த பிள்ளைகள்** குடும்பங்களின் நலன் சார்ந்து பயணித்துக் கொண்டிருக்கின்றோம் அந்த வகையில் எமது ஒளிரும் வாழ்வு அமைப்பின் உறுப்பினர் **தி.ரஞ்சன்** அவர்களின் மகள் செல்வி **ரஞ்சன் தேனுசா** என்பவருக்கு இருதயசத்திர சிகிச்சை மேற்கொள்ள இருப்பதால் கொழும்பில் அமைந்துள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

சிகிச்சைக்கான மருத்துவ செலவு போக்குவரத்து செலவு மற்றும் உணவு என்பவற்றுக்கும் மிகவும் கஸ்ரப்படுகின்றார். மேலும் இவரின் குடும்பத்தில் தந்தை கூலி வேலை செய்தே குடும்பத்தினை நடாத்தி வந்தார் தற்போது இவ் மருத்துவ செலவினையும் குடும்ப செலவினையும் அவரால் மேற்கொள்ள முடியாத நிலையில் எம்மிடம் உதவியினை கோரியுள்ளார்.எனவே தங்களிடம் நாம் இவ் உதவியினை கேட்டு நிற்கின்றோம் இவ் உதவியினை வழங்குவீர்களானால் நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

..............................
தலைவர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

தலைவர்,

ஒளிரும் வாழ்வு அமைப்பு,

துணுக்காய்.

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai



நாடகத்தென்றல் - துகள்
இணைந்து நடாத்தும்
நாடகப்போட்டி 2026
17.10.2026
பிராங்பேர்ட் – யேர்மனி
தேதியை நினைவிற்கொள்ளுங்கள்
நாடகத்தோடு இணைந்து வாருங்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தொடர்புகளுக்கு
thugal21@gmail.com
004915201733013
ப. தியான்



















இலங்கையில் மிகப்பெரிய மனிதப் புதைகுழிகள் காணப்படும் யாழ் - செம்மணிப் பகுதியில் 24.06.2026 வரை (427) நாநூற்றி இருபத்தேழு மனித எலும்புக்கூடுகள் அகழ்வாராட்சியில் கண்டுபிடிக்கப்பட்டன. இவை அவலம் மிக்க காட்சிகளின் பதிவுகள் 24.06.2026 அகழ்வு நிகழ்வுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டன.. எதிர்வரும் 17.07.2026 தொடக்கம் மீண்டும் அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 238




23வது சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகள் மெக்ஸிக்கோ, கனடா, அமெரிக்காநாடுகளில் 11.06.2026 - 19.07.2026 வரை நடைபெறுகின்றன. இப்போட்டி பற்றிய தகவல்கள் சென்ற மண் இதழிலும் இந்த மண் இதழிலும் வெளிவந்துள்ளன. இன்னும் மேலதிக தகவல்கள் நமது அடுத்த மண் இதழில் இடம்பெறும்.

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |